திருவள்ளுவர் ஆண்டு 2036

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 9 செப்டம்பர் 2005

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

செப்டம்பர்-05

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி — தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் — துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., — செயலாளர்
திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்., — உறுப்பினர்
திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S., — உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம் பி.ஏ., — உறுப்பினர்
திரு. இரா.குருசாமி பி.ஏ., — உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., — உறுப்பினர்
திரு. இரா.கண்ணன் — உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., — உறுப்பினர்
திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ., — உறுப்பினர்
திரு. பி.வீரணன் — உறுப்பினர்

கல்லூரிக் குழு

டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., — தலைவர்
திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., — செயலாளர்
திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., — உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் — உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம், பி.ஏ., — உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ., — உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ., — உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., — உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., — உறுப்பினர்
இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி — உறுப்பினர்
திரு. இரா.கண்ணன் — உறுப்பினர்
திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்., — உறுப்பினர்
டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் — உறுப்பினர்
டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை — உறுப்பினர்
டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை உறுப்பினர்
பல்கலைக்கழக உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 99
பகுதி : 9
செப்டம்பர் 2005

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 6	ரூ.

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

பொருளடக்கம்

ஒரு புறனடை - 218
பேராசிரியர் ந.சுப்ரமண்யன்

சங்க இலக்கியங்களில் அகவாழ்வியல் நிமித்தங்கள் - 222
முனைவர் மு.மீனா

பெரியபுராணக் காப்பிய ஒருமை - 232
முனைவர் சுப. அண்ணாமலை

சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் - 240
முனைவர் இரா.கோதண்டராமன்

சங்க இலக்கியத்தில் நாடகக் கூறுகள் - 248
சுந்தரி சிவக்கண்ணன்

ஒரு புறனடை

பேராசிரியர் ந. சுப்ரமண்யன் பி.எச்.டி.,
45, சிவலிங்கம் லே அவுட், உடுமலைப்பேட்டை - 642 128

தொல்காப்பியம், காக்கைப்பாடினியம், அவினயம் முதலியன தோன்றிய பண்டைக் காலத்தேயன்றி, இடைக்காலத்தே - இளம்பூரணர், அமிர்த சாகரர் முதலியோர் காலத்திற்குப்பிறகும், சிவஞான முனிவர் காலத்திற்கும் முன்புமாக் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய எல்லாத் தமிழ் இலக்கணங்களிலும் தலை சிறந்தது என்று மரபு வழியே கற்றறிந்த அறிஞர்கள் கருதி ஏற்றுக் கொள்ளும் தகுதியுடையது பவணந்தியார் இயற்றிய நன்னூலேயாகும். அவர் எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்னும் ஐவகைத் தமிழுக்கும் இலக்கணம் வகுத்தாராயினும் நமக்கு இப்போது எஞ்சி நின்று கிடைப்பது எழுத்துக்கும் சொல்லுக்குமுள்ள இலக்கணச் சூத்திரங்களே. ஆதலால் சொல்லதிகாரத்தின் இறுதியில் அவர் தந்துள்ள புறனடைச் சூத்திரத்தையே நன்னூல் என்னும் நன்னூலின் புறனடைச் சூத்திரமாகக் கருதுவோம். அச்சூத்திரமாவது

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்பதேயாகும். இது தமிழ்க் கற்றார் யாவருமறிந்தது. புறனடை எனில் நூற்குப்புறத்தே சேர்க்கப்படும் அடை (அடைமொழி என்பது போல); ஆதலின், புறன் + அடை = புறனடை ஆயிற்று. சூத்திரம் என்பது தமிழிற் புகுந்தவட சொல் ; இது சுருக்கமாகக் கூறப்படும் விதி என்று பொருள்படும். (சூத்திரம் எனில், 'நூல்' 'சிறு கயிறு' என்று அர்த்தந்தருவது.)

இச்சூத்திரம் எந்நுதலிற்று என்று கேட்பாரிலர் ; இதுதான் விளக்கமாகத் தெரிகிறதே, இதைப் பற்றி வினா ஏன் என்று பெரும்பாலோர் புறத்தேயுள்ளதைப் புறக்கணிப்பர். ஆயினும் பார்ப்போம்.

'பழையன' என்பவை வழக்கற்றுப் போனவை. இடைக்காலத்திருந்த உரையாசிரியர்கள் பலர் அவர்கள் காலத்திலேயே பல சொற்களும் சொற்றொடர்களும் வழக்கற்றுப் போயின என்று கூறுவதால் 'கால வகையினானே' சொற்கள் வழக்கறுதல் இயல்பு என்பது தெளிவாகும். உதாரணமாக 'இவ்விடத்தில்' என்பதைக் குறிப்பதற்கு 'அதோனி' என்னும் சொல்லைப் பயன்படுத்தி வந்தனர். (தொல்காப்பியம், எழுத்ததிகாரம் 159ம் சூத்திரம் உரையிற் காண்க.)

அவ்வாறே பிற்காலத்தே வழங்கி வந்த சில சொல்லாட்சிகளும் இறந்து படக்கூடும். இவ்வாறு சொற்கள் முதலியன வழக்கிழந்து போதற்குக் காரணங்கள் பலவுள. அவற்றுள் முக்கியமானது அவற்றின் நடைமுறைப்பயனின்மை, தவிர மிக முற்காலத்தில் சிலரே கடின நூல்களைப்படித்தனர். பிறகு கல்வி பரவப் பரவ அதன் தன்மையும் மாறலாயிற்று. அகலமும் குறுகலாயிற்று. இன்று யாவரும் படிக்கும் வாய்ப்பினைப் பெறாவிடினும்உரிமையையேனும் பெற்றுள்ளனர். இந்த நிலைமை ஏற்படவே, இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகட்கு முன்பு பயிற்சியிலிருந்த சொற்களில் சிலவும் இன்று வழக்கிழந்தன. இவ்வாறே பல வழக்கிழக்கின்றன. உரையாசிரியர்களும் 'வந்துழிக் காண்க' என்று சிலவிடங்களில் கூறுகின்றனரெனில், வழக்கீறு வழக்காறாகி விட்டது என்பதுதான் பொருள். ஆயினும் கருத்தின் கருவேனும் உள்மனத்தில் தங்கியிருக்குமாதலின், அதனை வெளிப்படுத்த எளிய (அதாவது கல்லாதாரும் புரிந்து கொள்ளக் கூடிய) சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது இயல்பு. இவை தாம் 'பழையன கழிதல் மற்றும் புதியன புகுதல்'. இது குற்றமன்று, இயல்பு என்று கூறவந்த ஆசிரியர் இவையாவும் 'வழுவல' என்றார். ஆனால் இரண்டாமடியில் காலவகையினானே! என்றும் கூறினார். காலம் 'வேண்டினால்' 'தேவை ஏற்பட்டால்' 'தவிர்க்க முடியாத காரணங்களால்' மட்டுமே இவை நிகழ வேண்டும். மற்று, பழைய சொல்லாட்சிகள் இருந்தபடி இருத்தல் வேண்டும் என்பதே கருத்து.

சொற்கள் கருத்துக்களின் வாயில்கள் அவற்றிடையே ஒரு பொருத்தம் இருத்தல் வேண்டும். கருத்துக்கள் இலையெனில் வாயில்கள் திறவா. சொற்கள் அருமையானவை கிடைப்பினும் அவற்றைப் பயன்படுத்தும் திறனிலிகள் கையில் அவை அகப்பட்டுவிட்டால், வாயில்களை மூடிவிடுவதுண்டு. ஆகவே பழைய சில சொற்கள் சிலபொருத்தமான சமயங்களில் மட்டும் சிலரால் மட்டும் பயன்படுத்தப்படலாம். ஆனால் நன்னூல் இலக்கண நூலாதலின் 'பழையன' என்பவை இலக்கணத்தோடு தொடர்புபட்டவற்றையே குறிக்கும் எனலாம்.

அஃறிணை எழுவாய்ப் பன்மையாதலின் பயனிலையும் அஃறிணை வாய்பாட்டுப் பன்மைக் குறிப்பு வினையான 'அல்ல' என்று நின்று, செய்யுள் நோக்கி 'அல' என்றாயிற்று.

பிற மொழிபேசும் மக்களோடு தவிர்க்க முடியாத தொடர்புகள் வரலாற்று வாயிலாக நேரும்போது இரு வேறுமொழிகளின் சொற்கள் ஒன்றோடொன்று உறழ்ந்து ஒரு மொழிச் சொற்களாக உருமாறி விடுதலும் பயிற்சியில் வருதலும் இயல்பே. ஆதலாற்றான், ஸபாஷ், ஸலாம், கார், ரோடு, போஸ்டு, அலமாரி, பரங்கி முதலிய சொற்கள் தமிழிற் புகுந்தன. இது வரலாறு என்னும் காலவகையினானே நிகழ்வனவாதலின் 'வழுவல' என்றார். இவ்வாறு நிகழினும் பாதிக்கப்படாமல் நிற்கும் சொற்களும் உள. லஷம் என்பது தமிழில் இன்றும் (ஆங்கிலத்திற் போல) நூறாயிரம் தான். கோடி எம்மொழிச் சொல் என்பது ஆய்விற்குரியது. ஆனால் கரி 'சாட்சியாகி' விட்டது.

ஆயினும் இது இலக்கண நூலாதலின் (Grammar and not philology) இப்புறனடை பெரும்பாலும் இலக்கண விதிகட்கே பொருந்தும் என்பது தெளிவு. செய்யப்படவேண்டிய திருத்தங்கள் செய்யப்படாமலேயே நிற்கின்றன. இப்புறனடை இலக்கண விதிகட்கே மிகவும் பொருந்துவனவாம். தமிழை வரன்முறையே கல்லாதார்க்கு 'அதிகாரி' தமிழ்ச் சொல் போன்றே காண்கின்றது. அவர்கள் பொருத்தமான பழந்தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது, அவற்றை அறியாமல் புதுத் தமிழ்ச் சொற்களை வீணுக்கு ஆக்குகின்றனர். இது வேண்டப்படாதது.

தமிழ் இலக்கணம் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பவற்றைக் கருதித்தேயன்றித் தொடர் இறப்பு, தொடர் நிகழ்வு, தொடர் எதிர்வு என்பவற்றை எண்ணிப்பார்க்கவில்லை. உ-ம் அவன் வந்தான் / அவன் வந்து கொண்டிருந்தான் / அஃறிணைக்கும் ஆண்பால் பெண்பால் வேறுபாடு அமைத்தல் வேண்டும் என்பதை மறந்தனர். உ-ம் பசு, காளை, அன்றியும் எண்களையும், பால்களையும் ஒரே பட்டியலிலிட்டு ஒன்றன்பால், பலவின்பால், ஆண்பால், பெண்பால் என்று அமைத்தமை அளவையிடல் விதிக்குப் (Division) புறம்பானது. இவை மாறவேண்டும். புது விதிகள் தேவைப்படுகின்றன. இவ்வாறு புதுவிதி ஆக்குவதில் தவறில்லை என்பதற்கே 'கால வகையினானே வழுவல' என்றார். வேண்டாத புதுமுயற்சிகளை மேற்கொள்வதைவிட (உதாரணமாக படகர் மொழிச் சொல்லான ஒத்தகமந்து என்பதை உதகமண்டலம் எனல் வேண்டப்படும் திருத்தங்கள் காலவகையினானே புகவேண்டும்என்பதை

நினைவிற் கோடல் வேண்டும். (பழையதைக்கழிக்காமல் கொள்ளுதலைக் கோடல் என்றோம்). வேண்டிய புதுவது புகுதலைக் கருதி இங்ஙனம் கூறிக் கொண்டே இருப்போம்.

அன்றியும் பொருத்தமான இடங்களில் 'ஆதி பகவன்' போன்ற வடசொற்களைப் போற்றுதலிலும் தவறின்று. ஒன்றன்பால் உயர்திணைச் சொற்களைப் போற்றுதலிலும் தவறில்லை. வடமொழிக்குரிய 'மரியாதை பகு வசனம்' தமிழிற்புகுந்து வேரூன்றிக் கொண்டுவிட்டது. அதை இனி மாற்றவோ தவிர்க்கவோ முடியாது.

மேற்கூறிய கருத்துக்களிற் சிலவற்றைச் சூரிய நாராயண சாஸ்திரியார் முன்பே தமது தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். ஆயினும், அதனை அறியாதார்க்கு மேலும் சில கருத்துக்களையும் கூறி இக்கட்டுரையை யாத்தோம். ஒரு இலக்கண மரபுத் தவற்றினை விடாது மேற்கொள்கின்றனர் சிலர். அஃதாவது அவனின் (அவனுடைய என்னும் பொருளில்) என்று எழுதுகின்றனர். இன் உருபு பெரும்பான்மை ஐந்தனது. ஆயினும் ஆறுக்கு வரும் 'இது' கொற்றனின் வீடு என்பதிற்குற்றமின்று. ஆயினும் அண்மை அல்லது சேய்மைச் சுட்டிடைச் சொற்களாகிய (Prnoun) அவன், அவள் என்பனவற்றோடு இன் என்னும் ஆறனுருபைச் சேர்த்தல் மரபன்று. காலவகையினானே கூட அது வழு ஆகாமற்போகாது. ஏனெனில் பண்டைய இடைக்காலத் தமிழ்ச் சான்றோர் எழுத்துக்களில் இவ்வாட்சியைக் காண்டல் அரிது.

ஆதலால் காலவகையினானேதாமே வரும். புதியன அல்லாதவற்றை (இலக்கணவிளக்க நூலார் யாது கூறினும்) நாம் முயற்சிமேற்கொண்டு கழித்தலும் புகுத்தலும் வழுவேயாம் என்றும் கருதவேண்டும்.

சங்க இலக்கியங்களில் அகவாழ்வியல் நிமித்தங்கள்

முனைவர் மு.மீனா
எம்.ஏ., எம்.எட்., எம்ஃபில்., பி.எச்.டி.,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

முன்னுரை:

வாழ்க்கை என்பது சூட்சுமம் நிறைந்த ஒன்று. பிறப்பும் இறப்பும் மட்டுமே அனைவருடைய வாழ்வில் நிகழும் இருவேறு எல்லை நிகழ்வுகளாக அமையும். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே உள்ள வாழ்நாள் நிகழ்வுகள் எவை எவை என்பது குறித்து யாராலும் அறுதியிட்டுக் கூற இயலாது. மேலும் பிறப்பு, வாழ்நாள் நிகழ்வு, இறப்பு ஆகியன எப்பொழுது நிகழும் என்பதனையும் யாராலும் அறுதியிட்டுக் கூறஇயலாது. வெளிப்படையாகத் தெரிகின்ற ஒரு பொருளை யாரும் சிறப்புக் கவனத்துடன் நோக்குவது கிடையாது. மறைபொருளாக உள்ளதே அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும். எனவே தான் வாழ்வின் ரகசியங்களை அறிய அனைவரும் மனஈடுபாடு கொள்கிறோம். மறைபொருளை ஏதாவது ஒரு வழியில் அறிந்து கொள்ள விழைகின்றோம். அவ்விளைவின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளே மனிதர்களின் பல்வேறு நடவடிக்கைகள். அவற்றுள் முக்கியமான ஒன்றாக அமைவதே நிமித்தம் பார்த்தல் என்பதாகும்.

"நிமித்தம் என்பது வருங்காலம் குறித்து அறியப்படும் ஓர் உத்திமுறை". இந்நிமித்தம் என்பது தொல்காப்பியரால் மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றது. புறத்திணை இறுதி நூற்பாவில்...

"..................
அச்சமும் உவகையும் எச்சமும் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படைக் கிளவியும்
........................."

என்று குறிப்பிடுகிறார்.

நாள் நிமித்தம், புள் நிமித்தம், பிறவற்றின் நிமித்தம் ஆகிய மூவகை நிமித்தங்கள் மக்களுடைய வழக்காறுகளில் அமைந்து இருந்தன. கட்டுபார்த்தல், கழங்கு பார்த்தல், கூடலிழைத்தல், வெறியாடல் ஆகியன மக்கள் தம் முயற்சியில் நிகழ்த்துகின்ற செயல்பாடுகள். இவற்றை நிமித்தங்களில் கொணர இயலாது. அகம் மற்றும் புற வாழ்க்கையில் பின்பற்றப்பட்ட நிமித்தங்களைச் சங்க இலக்கியங்களின் வழி ஆய்தல்

என்பது பரந்துபட்ட களமாக இருக்கும் என்பதால், அக வாழ்க்கையின் நிமித்தங்களை மட்டுமே ஆய்வுப் பொருளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

திருமணநிகழ்வு தொடர்பான நிமித்தங்கள் :

மக்கள் தம் அகவாழ்வில் நடைபெறும் இன்றியமையா நிகழ்ச்சிகளுக்கு நிமித்தங்கள் பார்த்தனர். மனித வாழ்க்கையில் இன்றியமையா நிகழ்வு "திருமணம்" என்பதாகும்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப".

என்று தொல்காப்பிய நூற்பா திருமணச்சடங்குமுறை உருவாவதற்குக் காரணத்தைச் சுட்டுகிறது. மனத்தால் இணையும் மணவாழ்வில் பொய்யும் குற்றமும் ஏற்படலாயிற்று. இதன் காரணமாகத் திருமண நிகழ்வு என்பது சடங்குமுறையாக உருவாக்கம் பெற்றது என்பதை அறியலாம்.

பொதுவாக அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்குமே வாழ்வின் நால்வகை உறுதிப்பொருள்கள் (விழுமங்கள்) என்று கொள்ளப்பட்டன. வாழ்வின் முதன்மை மதிப்புகள் என்று சுட்டப்பட்டன. மனித வாழ்வில் திருமணம் என்பது அடிப்படையான ஒரு செயல்பாடாகக் கருதப்படுவதால் முதன்மை மதிப்புகளுள் ஒன்றாகத் திருமணம் என்பதும் இக்காலக் கவிதைகளில் மதிப்புகள் என்னும் முனைவர் பட்ட ஆய்வில் இணைக்கப்பட்டது. இவ்வகையில் திருமணம் என்பது வாழ்வில் முதன்மை இடத்தைப் பெறுகிறது. இத்தகு இன்றியமையாத நிகழ்வில் மக்கள், நிமித்தங்களைக் கையாண்டனர். திருமணம் தொடர்பான நிமித்தங்களில் நாள் நிமித்தம் என்பதே முதன்மை இடத்தைப் பெறுகின்றது. எனவே தான் தொல்காப்பியரும் மூவகை நிமித்தங்களைச் சுட்டும்போது முதலில் நாள் நிமித்தம் என்று குறிப்பிடுகிறார். திருமணம் என்பது ஆடவர், மகளிர் வாழ்வில் பெருவிழா என்பதால் நல்லநாளும், நேரமும் பார்த்துத் திருமணம் செய்விக்கின்றனர். சங்க அகப் பாடல்கள் அனைத்திலும் இக் குறிப்புக் காணப்படுகின்றது.

"நன்னாள் வதுவை கூடி" - என்று
அகத்திணை நூலான நற்றிணையும் (125 : 7)

"அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகட மண்டிய துகள்தீர் கூட்டத்துக்

கடிநகர் புனைந்து கடவுட் பேணி
படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர்"

– என்று அக நானூறும் (136: 4-8)

கனையிருள் அகன்ற கவின் பெறு காலை
கோள்கால் நீங்கிய கொடு வெண்திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
வதுவை நன்மணம் கழிந்த ....

(அகம் 86)

என்று நல்லநேரம், மற்றும் நல்ல நாள் பார்த்துத் திங்களை உரோகிணி கூடுகின்ற நாள் குற்றமற்ற நன்னாளாக மக்களால் கருதப்பட்டது என்பதையும் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. மேலும் அவற்றிற்கான காரணத்தையும் கலித்தொகை சுட்டுகிறது.

"பாஅல் அம் செவிப் பணைத்தாள் மாநிரை"

என்னும் கலித்தொகைப்பாடல் (5 : 1-9) நன்னாளில் மணமுடிக்கப் பெற்ற தலைவனும், தலைவியும் எக்காரணத்தை முன்னிட்டும் பிரிந்து விடாதபடி நாள்மீன் தடுத்து விடும் என்ற குறிப்பினை

"நாளும் கோள்மீன் தகைத்தலும் தகைமே"

என்று சுட்டுகின்றது.

"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லை"

இவ்விடத்து, களவு மணத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன் ஓரையும், நாளும் பார்ப்பதில்லை என்ற களவியல் நூற்பாவினை ஆராய்தல் இன்றியமையாததாகும். ஓரையும் நாளும் தலைமக்களைப் பிரியாமல் தடுத்து வைக்கும் எனில் களவில் ஏன் தலைமக்கள் இதனைப் பின்பற்றவில்லை. களவுக் காலத்தின் போது, இருவரும் யாரும் அறியாமல் பழகக் கூடிய கட்டுப்பாட்டில் உள்ளனர். நெடுந்தொலைவு பயணம் செய்து தலைவியைக் காணவரும் தலைவன் நல்லநாள், நல்லநேரம் பார்த்துக் கிளம்புதல் என்பதும் விரைவான போக்குவரத்து வசதியும், வாய்ப்பும் அக்காலத்தில் இல்லை என்பதால் நல்லநேரத்தில் வந்தடைதல் என்பதும் இயலாததாகும். மேலும் இவர்கள் இருவரும் சந்தித்தல் என்பது இவர்களின் செயல்பாட்டிற்குள் மட்டுமே நிகழக் கூடிய நிகழ்வாகவும் இருப்பதில்லை. இவர்கள் இருவரின் குடும்பநிலை, உறவினர்கள்,

ஊர்மக்கள் அனைவரின் தலையீடும் இருக்கக் கூடிய சூழ்நிலை இருப்பதால் இவர்களால் நன்னாள், நன்னேரம் பார்க்க இயலாது. எனவே தலைமக்கள் நேரம், காலம் பார்ப்பதில்லை. வாய்ப்பை மட்டுமே எதிர் நோக்குகிறார்கள். மேலும், களவு வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் சந்தித்து இன்புறல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலையில் இருவரும் ஒன்றி இருப்பதால் வேறு ஒன்றும் அவர்கள் கருதுவதில்லை. எனவே தான் நாள், நேரம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொள்ளாமல் மனப்பொருத்தம் ஒன்றே போதும் என்று எண்ணுகின்றனர்.

ஆனால் கற்பு வாழ்க்கையில் இன்பம் துய்த்தல் ஒன்று மட்டுமே எதிர்பார்ப்பாக இல்லாத காரணத்தால் நன்னாள், நன்னேரம், ஆகியன ஏற்றுக் கொள்ளப்படலாயின என்பது தெரிகின்றது. மேலும் வதுவைக் காலத்தின் போது, மணமக்கள் அருந்ததி பார்த்தல் என்பதும் முக்கியமாகக் கருதப்பட்டது.

> "வதுவை மகளிர் நோக்கினர், பெயர்த்து
> வாழ்நாளறியும் வயங்கு சுடர்"

என்னும் பதிற்றுப்பத்தின் (89:17-18) பாடல் வரிகள் சுட்டுகின்றன. இதைப் போல புள் நிமித்தம் பார்த்தலும் திருமண நிமித்தங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது.

> "மைப்புஅறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
> வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
> புள்ளுப் புணர்ந்தினிய வாக ...."

என்று அகநானூறு பாடல் (136:1-3) சுட்டுகிறது.

மேலும் வேங்கைமரம் பூத்தல் மணநாளை அறிவிக்கின்ற நன்னிமித்தமாகக் கொள்ளப்பட்டது.
இதனை,

> "குன்றவேலிச் சிறுகுடி யாங்கண்
> மன்ற வேங்கை மணநாள் பூத்த
> மணியேர் அரும்பின் பொன்வீ தாஅய்"

என்ற அகநானூறு பாடல் வரிகளால் அறியலாம். மேலும் இதனை,

> "நன்னாட் பூத்த நாகிள வேங்கை"

என்ற அகநானூறு (85:10) பாடல் வரியும் சுட்டுகின்றது. அதுபோல வேங்கை மலரும் காலத்தில் கானவர்கள் திருமண விழா நிகழ்த்துவர் என்பதனைக் கலித்தொகைப் பாடல் ஒன்று

> நின்னுறு விழுமங் கூறக்கேட்டு
> வருமே தோழி நன்மலை நாடன்

வேங்கை விரிவிட நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன்
கொளற்கே. (38:23-26)

என்று குறிப்பிடுகிறது.

ஏன்? வேங்கை மலரும் காலத்தில் கானவர்கள் மணவிழா எடுப்பர் என்பதை ஆராய்தல் சிறப்பு. வேங்கை மலர்வதும் தினைக் கதிர்கள் முற்றுவதும் ஒரே காலத்தில் நிகழக்கூடிய நிகழ்வாகும்.

எவ்வாறு, முல்லைமலர் அரும்புவது கார்காலத்தைக் குறித்து நிற்குமோ, அதுபோல வேங்கை மலர்தல் தினை விளைந்திருக்கும் என்பதனைச் சுட்டும். இதனையே கணிவாய் வேங்கை என்று நற்றிணைப் பாடலில் (373) கபிலர் குறிப்பிடுகின்றார்.

இந்நிகழ்வு நம்முடைய கிராமப்புறமக்களின் வாழ்வோடு ஒத்து நோக்கத்தக்கதாகும். தமிழர்களின் திருமணவிழா குறிப்பாகக் கிராம மக்களின் திருமணவிழா அறுவடைக்காலத்தினை ஒட்டியே அமையும். வேளாண்மையை உயிர்த்தொழிலாகக் கொண்ட நாடு நம்நாடு. ஆறுமாதக்காலம் வேளாண்மையும் மீதி ஆறுமாதக் காலம் ஓய்வுமாக அவர்களின் வாழ்க்கை அமையும். விதைப்புக் காலங்களில் விவசாயத் தொழிலில் விவசாயிகளுக்கு மிகுந்த செலவினங்களே அதிகம் இருக்கும். எனவே விவசாயம் நடைபெறும் காலத்தில் திருமணம் போன்ற விழாக்கள் இடம் பெறுவது இல்லை. ஆனால் அறுவடைக் காலத்தில் அவர்கள் பட்டபாட்டிற்கும் உழைத்த உழைப்பிற்கும் பயன் கிடைக்கும். அறுவடை செய்து முடித்து, பொருள் வளம் கையில் இருக்கும்போது தான் திருமணம் முதலான சுபநிகழ்ச்சிகளை நடத்துவர். விழாவிற்குத் தேவையான பணம் கையில் இருப்பதால் சிறப்பாக விழாவினை முடிப்பார்கள். இன்றளவும் இவ்வழக்கமே பெரும்பாலான கிராம மக்களிடையே நடைமுறையில் நிலவுகின்றது. வேங்கை மலர்தல் என்பதைத் திருமணத்திற்கான குறியீடாக அகப்பாடல்கள் சுட்டுகின்றன.

மேலும் ஆயர்குழல் ஊதும் ஓசை திருமணத்திற்கான நன்னிமித்தமாகக் கொள்ளப்படுகிறது. குழலோசை மங்கலமான பண் என்பதால் விரைவில் திருமணம் நடைபெறும் என்று நம்புகின்றனர். இவ்வாறாக நல்லநேரம், நல்லநாள் பார்த்தல், அருந்ததிபார்த்தல், வேங்கை மலர்தல், குழலோசைக் கேட்டல் ஆகியன திருமணம் தொடர்பான நன்நிமித்தங்களாகச் சங்கப் பாடல்களில் சுட்டப்பட்டுள்ளன.

தலைமக்கள் உடன்போக்கு நிகழ்த்திய பின்னர் அவர்கள் மீண்டு வருதலை நற்றாயும் செவிலித்தாயும் மிக ஆவலுடன் எதிர்பார்த்தல் இயல்பு நிலையாகும். அவ்வாறான சூழ்நிலையில் உள்ள நற்றாய், உடன்போக்கு நிகழ்த்திய தலைமக்கள் திரும்பி வரும்படி காக்கையைக்

நன்னிமித்தமாகக் கரையும்படி வேண்டுவதாக ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று,

"வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சிலோதியை வரக் கரைந்தீமே (391)"

என்று சுட்டுகிறது.

பிரிவுச் சூழலில் அமையும் நிமித்தங்கள் :

கல்வி, தூது, போர், காவல், பரத்தமை, பொருளீட்டல் என்பவற்றுள் ஏதாவது ஒரு காரணம் பற்றித் தலைமகன் தலைமகளைப் பிரிந்து செல்வதுண்டு. அவ்வாறு தலைமகன் பிரிந்திருக்கும் சூழலில் தலைமகள் தலைவனின் வரவு நோக்கி ஆவலுறுவாள். அச்சூழலில் பல்வேறு நிமித்தங்கள் அவள் மனதிற்கு அமைதி தருவனவாக அமையும். புள் நிமித்தம், (காக்கை, குயில்....) பல்வி நிமித்தம், வண்டு நிமித்தம், விரிச்சிகேட்டல் ஆகிய நிமித்தங்கள் அச்சூழலில் காணப்படுகின்றன. நாள்நிமித்தம் என்பது இச்சூழலில் இல்லை. புள் நிமித்தமே பெரும்பான்மையாகக் கொள்ளப்படுகின்றது. புட்களில் காக்கைக் கரைதல், குயில் பயிறல், நாரை உயரப் பறத்தல் ஆகியன தலைவன் விரைவில் திரும்பி வருவான் என்பதற்கான நன்னிமித்தங்களாகும் எனத் தோழியாலும், தலைவியாலும் சுட்டப்படுகின்றன.

பறவை நிமித்தம் என்று பொதுவான நிலையில் புள் நிமித்தம் சுட்டப்படுதலும் உண்டு. அகநானூற்றுப் பாடல் ஒன்றில்,

"புனை வினை நல் இல் புள்ளும் பாங்கின"

என்ற வரி இடம் பெறுகின்றது. புள் நிமித்தங்கள் நல்லனவாய் உள்ளன. எனவே தலைவன் விரைந்து வருவான் எனத் தலைவி தோழிக்குச் சுட்டுவதாய் இவ்வடி அமைகிறது. பெரும்பான்மையான சங்கப் பாடல்கள் தோழியும், தலைவியும் நன்நிமித்தம் பார்த்தலைக் குறிப்பிடுகின்றன. ஒவ்வோர் இடங்களில் நற்றாயும் தலைவனும் நிமித்தம் குறித்துப் பேசுவதாகவும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

வினைமுற்றி மீளும் தலைமகன், புள்ளினங்கள் கரைந்து நம் வரவை அறியும்படி செய்தனவோ? என்று தேர்ப்பாகனிடம் உரைப்பதாக நற்றிணைப் பாடலொன்றில் குறிப்புக் காணப்படுகின்றது.

"......... ஈண்டு நம் வரவினைப்
புள்ளறிவுறீ இயின கொல்லோ!"

புள் நிமித்தங்களில் காக்கைக்கரைதல் என்பது பெரும்பான்மையாகச் சுட்டப்படுகின்றது. தலைவனின் வருகையைக் காக்கைக் கரைந்த நன்னிமித்தத்தாலே உணர்ந்து தலைவி

ஆற்றியிருந்தமையைக் குறுந்தொகைப் பாடல் சுட்டுகிறது. பொருள்வயின் பிரிந்த தலைவன் குறித்த பருவத்தில் வந்துவிடுவான் என்பதைப் பல நிமித்தங்களின் வாயிலாகக் காட்டுகிறாள் தோழி.

"மனைமர நொச்சி மீமிசை மாச்சினை
வினைமாண் இருங்குயில் பயிற்றலும் பயிற்றும்"
என்று நற்றிணைப் பாடல் சுட்டுகிறது.

அதுபோல குறுந்தொகைப் பாடலொன்று பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைவிக்குத் தலைவன் வருவதற்குரிய நன்னிமித்தங்கள் வாய்க்கப்பெற்றுள்ளன என்பதனைக் குறிக்கும் தோழி,

"குருகும் இரு விசும்பிவரும்" என்று நாரைகள் உயரப்பறத்தலை நன்னிமித்தமாகச் சுட்டுகிறாள்.

பல்லி, ஒந்தி, ஆமா, யானை முதலான பிற உயிரினங்களின் வாயிலாகப் பல்வேறு நிமித்தங்கள் பார்க்கப்படுகின்றன. இவற்றில் பல்லி நிமித்தமே பெரும்பான்மையாகச் சுட்டப்படுகின்றது. குறிப்பாகப் பல்லி நிமித்தம் அகப்பாடல்களில் பாலைத்திணையில் மட்டுமே சுட்டப்படுவதாகும்.

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி நற்பக்கத்தே நின்று பல்லி ஒலித்தலை மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்வதாகவும் பல்லியைப் போற்றுவதாகவும் அகநானூற்றுப் பாடல் ஒன்று,

"ஓங்கிய நல்லில் ஒரு சிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறு பரவிக்
கன்று புகுமாலை." - என்று குறிப்பிடுகின்றது.

பிரிவுத் துன்பத்தால் தலைவி வருந்துகின்ற சூழலில் பல்லி ஒலிக்கின்றது. அவ்வொலியானது தலைவி காதில் தலைவனின் வரவை அறிவிக்கும் என்று இளங்கீரனார் அகப்பாடலில் சுட்டுகின்றார்.

"வருந்துதோட் பூசல்களையு மருந்தென
உள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத்தொடு துறைவி செவிமுதலாளே"
- என்று குறிப்பிட்டுள்ளார்.

தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, நெடுஞ்சுவரிலிருந்து பல்லி ஒலிப்பதை நற்சகுனமாகக் குறிப்பாள் என்பது நற்றிணைப்பாடலாலும் பாலைக் கலிப்பாடலாலும் அறியப்படுகின்றது.

"இடூஉ உளங்கண் இனிய படூஉம்
நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கின் தோற்றும்
என்று நற்றிணைப் (246 1-2) பாடலும்

"இனை நலமுடைய கானஞ்சென்றோர்
புனை நலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்
பல்லியும் பாங்கொத்து இசைத்தன"

என்ற பாலைக்கலிப்பாவும் குறிப்பிடுகின்றன.

பல்லி ஒலிக்கும் தோறும் தலைவி மனம் நடுங்கி
"நல்லன கூறுக" என்று பரவிநிற்பாள்.

பல்லி ஒலிக்கின்ற முறை, அது ஒலிக்கின்ற காலம், இடம் ஆகியவற்றின் அடிப்படையில் நன்னிமித்தங்கள், தீநிமித்தங்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதனை இதன்வழி அறியலாம்.

இவை போன்றே மாந்தரை மையமாக வைத்து நிமித்தங்கள் கணிக்கப்படுதலும் உண்டு.

அவற்றுள் ஒன்று "நல்லோர் வாய்ப்புள்" என்பதாகும். முது பெண்டிருடைய நல்ல சொற்களும் நிமித்தமாகக் கொள்ளப்பட்டன என்பதை முல்லைப் பாட்டின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

அதுபோலவே மாந்தர் எதிர்ப்படல் என்பது நிமித்தமாகக் கொள்ளப்பட்டது. நற்றிணையில்,

"திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப"

என்ற தொடர் அமைகின்றது.

அவற்றுள் முதன்மையானது நற்சொல் / (விரிச்சி கேட்டல்) என்பதாகும். விரிச்சி கேட்டல் என்பது எதிர் நோக்கியிருக்கும் கருத்தை விரிவாக அறிய முனைதல் என்று கொள்ளலாம். புறத்துப் போருக்குச் செல்லும் முன்னர் விரிச்சிப் பார்க்கப்படும். விரிச்சி கேட்க விரும்புவோர் ஊர்ப்புறத்தே சென்று நெல்லையும் மலரையும் தூவி, பக்கத்திலே உண்டாகும் மக்களின் சொல்லை எதிர்பார்த்து நிற்பர். அங்ஙனம் நிற்கின்ற பொழுது அவர்கள் சொல்லுகின்ற சொல், தம் கருத்துக்கு இயைபுடையதாயின் நன்று எனவும், மாறுபடுவதாயின் தீது எனவும் கொள்வர். இதனை முல்லைப் பாட்டின் வழி அறியலாம். எனவேதான் விரிச்சி கேட்டல் என்பது நற்சொல் கேட்டல் எனவும் குறிக்கப்படுகின்றது.

பிரிந்து சென்ற தலைமகன் கூறிச்சென்ற பருவம் வந்துவிட்டதை அறிந்து தலைவி விரிச்சிக் கேட்கும் பழக்கம் இருந்தது என்பதனை,

"புள்ளு மோராம் விரிச்சியும் நில்லாம்"

என்ற குறுந்தொகைப் பாடல்வழி அறியலாம். அதுபோல தோழியும் விரிச்சிக்கேட்டு தலைவியிடத்து உரைப்பதுவும் உண்டு என்பதனை நற்றிணைப்பாடல் வாயிலாக அறியலாம். "தான் கவலையுற்று இருக்கும்போது பக்கத்து வீட்டில் ஒருபெண் வேறொருத்தியிடம் உரையாடும்போது "அவன் இப்பொழுதே வருவேன்" என்று கூறினாள்.

எனவே தலைவன் உடனே வந்து விடுவான் எனச் சுட்டினாள் தோழி!" அதுபோல் ஆவும், கன்றும் இணைந்து திரும்பி வரும் என்ற பொருளில் முல்லைத் திணைப் பாடல் ஒன்று செவிலித் தாயின் கூற்றாக அமைந்துள்ளது. பிரிந்து சென்ற தலைமக்கள் இருவரும் திரும்பி வருவர் என்று மனஆறுதல் கொள்வதாக அமைந்துள்ளது.(தெரிவித்துள்ளது.)

அதற்குத் திருந்திய கலன் அணிந்த மகளிர் நன்னிமித்தமாக நிற்பர் என்று அ.நாராயணசாமி ஐயர் குறிப்பிடுகிறார்.

ஆனால், சங்க இலக்கியங்களில் மாந்தர் எதிர்ப்படலை அவர் தம் வரவையும், செலவையும் வைத்து நிமித்தம் காணும் மரபு காணப்படவில்லை. மாந்தர் பேசும் இயற்கையான பேச்சினையே நன்னிமித்தமாகக் கொண்டார் என்று இ. சுந்தரமூர்த்தி "இலக்கியச்சுடர்" என்ற தம் நூலில் குறிப்பிடுகிறார்.

மாந்தரை மையப்படுத்திக் கணிக்கும் நிமித்தங்களுள் கனவு காணுதலும் வலது, இடது கண் துடித்தல் சிறப்பாகவும் பிற உறுப்புக்கள் துடித்தல் பொதுவாகவும் நிமித்தங்களாகக் கொள்ளப்பட்டன. வளைசெறிதல், கண் கலங்குதல் ஆகியனவும் நிமித்தங்களாகக் கொள்ளப்பட்டன.

அனைத்தையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது சில கூறுகள் நமக்கு வெளிப்படும். அகவாழ்வில் நிமித்தங்கள் பார்த்தல் என்பது தலைமக்களின் திருமணம் மற்றும் பிரிந்து சென்ற தலைமகன் திரும்பி வருதல் ஆகிய பின்னணியிலேயே பெரும்பான்மையாகக் கணிக்கப்பட்டுள்ளது.

"வினையே ஆடவருக்கு உயிரே
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"

என்பது. இலக்கியக் கூற்று மட்டுமல்ல; நமது வாழ்வியல் நிலையின் வெளிப்பாடுதான் என்பதனை இது உணர்த்துகின்றது.

தலைமக்களின் திருமணத்திற்கு நன்னாள் கணிக்கப்பட்டது. நாள் என்பது விண்மீன்களை அடியொற்றி வரையறுக்கப்பட்டது. கோள் மீன்கள் சூரியனிடமிருந்து ஒளியைப் பெறுபவை. விண்மீன்கள் இயல்பிலேயே ஒளியுடையவை. எனவே இயல்பிலேயே ஒளியுடைய விண்மீன்களைப் போல தலைமக்களின் வாழ்வு ஒளியுடையதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நாள் அடிப்படையில் திருமணம் நிகழ்த்தப்படுகிறது.

புள் நிமித்தம், பிற உயிரினங்களின் நிமித்தம் ஆகியவற்றை நாம் வெறும் நம்பிக்கை என்று மட்டும் கொள்ள இயலாது. மனிதர்களைவிட பிற உயிரினங்களுக்கு எதிர்காலத்தில் நிகழக் கூடியவற்றை அறிந்துகொள்ளும் நுட்பம் உண்டு.

போஜராஜன் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகளில் இந்நிகழ்வுகள் சிறப்பாகச் சுட்டப்பட்டிருக்கும்.

(நாய் மோப்பத் திறன் வாயிலாகத் துயர நிகழ்வுகளை அறிந்து கொள்ளல் போன்றன இதற்குச் சான்றாக அமையும் எனலாம்).

மழைவரப் போகிறது என்பதை ஆடு தரையில் மூக்கைத் தேய்த்தலின் வாயிலாக நம் முன்னோர் உணரலாயினர். அது இன்றைக்கு அறிவியல் பூர்வமாக உண்மை எனத் தெரியப்பட்டுள்ளது.

(மேகம் திரளுதல் - பூமி குளிர்ச்சி அடைதல்
நுண்ணுயிரி உருவாதல் - மேய்கின்ற
ஆடு தும்மல் வரும் - அதனை அடக்க
தரையில் தேய்க்கும்)

"காக்கைக் கரைதலை நிமித்தமாகப் பார்ப்பதற்குக் காரணம்; காக்கையின் இயல்பு-கூடி வாழ்தல்" என்பது இவ்வியல்பினை அடியொற்றியே காக்கைக் கரைதல் என்பது பிரிந்து சென்றவர்கள் ஒன்று கூடி மகிழும் வண்ணம் வருவர் என்று நம்பப்பட்டது எனலாம்.

அது போலவே வண்டு ஓதல் என்பதும், குயில் பயிறல் என்பதும் குழலோசை என்பதும் இனிமை பயக்கக் கூடியவை என்பதால் இவை அனைத்தும் நன்னிமித்தங்களாக மக்கள் வாழ்வில் பின்பற்றப்பட்டன எனலாம்.

களவுக் காலத்தில் ஓரையும், நாளும் பார்க்கப்படுவதில்லை என்ற கருத்திற்கும் வேங்கை மலருகின்ற பருவத்தே திருமணம் நிகழ்த்தப்பட்டது என்ற கருத்திற்கும் உள்ளே காட்டப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து நிமித்தங்கள் பார்த்தல் என்பது அவர்களுடைய வாழ்வியல் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இல்லை என்பதை உணரலாம்.

மேலும் நிமித்தங்கள் காணல் என்பது அவர்களின் வாழ்வில் அவர்களுடைய இயல்பிற்கு ஏற்ப, வாழ்வின் தன்மைகளுக்கேற்ப கொள்ளப்பட்டதே என்பதையும் உணரலாம்.

எனவே தான் இன்றளவும் நிமித்தங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன போலும்...

பெரிய புராணக் காப்பிய ஒருமை

திருநின்றசெம்மை

முனைவர் சுப.அண்ணாமலை

இதுகாறும் போற்றப்பட்ட தொண்டர்களிடம் அன்பின் ஆழ்நிலையைக் கண்டோம். இனி, அது பரந்த நிலையை உடையதாக, சமுதாயத்தை நோக்கியதாக அமைவதைச் சில தொண்டர்களின் வரலாறு காட்டுகிறது. அத்தகைய தொண்டர்கள், அடுத்து, ஒருங்கு போற்றப்படுகின்றனர். அவர்கள் இறைவனிடம் கொண்ட அன்பு, எவ்வுயிர்க்கும் வைத்த அன்பாக மலர்ந்தது. இறையன்பின் அடிப்படையில் மனித நேயம் வளர்ந்தது. இறைத்தொண்டர்கள், தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று, மக்களிடையே சமய வாழ்வின் அவசியத்தையும் பெருமையையும் பரப்பினர். அவர்கள் மேடையேறிப் பிரசாரம் செய்யவில்லை. ஆனால், தமது சொந்த வாழ்க்கை உதாரணத்தின் வாயிலாகவும் ஊர்தோறும் சென்று, ஆலய வழிபாட்டைக் கூட்டாக, இசை வழிபாடாகச் செய்ததன் வாயிலாகவும் கலந்துரையாடல் நடத்தியும் திருவருளால் பிற சமயத்தாரை வாதங்களில் வென்றும், தமிழ் மரபு, தமிழ் இசை, ஆடல், பாடல் மூலம் தோற்றுவித்த மறுமலர்ச்சி வழியாகவும் சைவ சமயத்தைப் பரப்பினர்.

அவர்கள் தொண்டின் பயனாகத் தமிழகம் முழுவதும் சைவம் பரப்பியதன் சான்றே, பெரிய புராணத்தில் பல குலங்களையும் சேர்ந்த அடியார்கள் குலவேறுபாட்டைக் கடந்து சமய நெறியால் உயர்ந்தமையாகும்.

பொதுவாக ஒரு சமயம் மன்னரைக் கொண்டும், சான்றோரைக் கொண்டும், துறவிகளைக் கொண்டும் பரவியதை மற்ற சமயங்களின் வரலாறு காட்டுகின்றது. ஆனால் தமிழகத்தில் சைவம், இந்த முறைகளால் அன்றி பெரியோர்களின் வாழ்க்கை உதாரணத்தால் பரவியது.

ஒரு சமயத்தின் வரலாற்றில், அதன் கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தோரினும், அதனைப் பரப்பியோர் மிகுதியும் சிறப்புடையோராவர். சைவ சமயத்தைப் பரப்பிய பெருமக்களின் தனிச்சிறப்பு, அவர்கள் இறைவன் திருவருளைப் பெற்றுடையோர் என்பதாகும். அத்தகு தொண்டர் பெருமக்களும், அவர்களைத் தத்தம் குருவாகக் கொண்டு, சமயம் பரப்புதலில் துணைநின்ற பெருமக்களும் அடுத்துப் போற்றப் பெறுகின்றனர்.

அவர்களுள் திருநாவுக்கரசரும், காரைக்காலம்மையாரும், நமிநந்தியடிகளும் இறைவன் திருவருள் பெற்றுடையோர். நீலநக்கரும், குலச்சிறையாரும், திருஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டோர். பெருமிழலைக் குறும்பர், நம்பி ஆரூரரைக் குருவாகக் கொண்டு, 'காணாதே ஆட்பட்டவர்.' அப்பூதி அடிகள், அப்பர் பெருமானின் தாள் பற்றி உயர்ந்தவர்.

இப்பெருமக்களின் வரலாறுகள், திருவருளுணர்வின் வலிமையாலும், குருவருள் போற்றும் பண்பினாலும் சைவ நெறி எவ்வாறு பரவிற்று என்பதைக் காட்டுகின்றன. இனி, முதற்கண் திருநாவுக்கரசரின் வரலாற்றைக் காண்போம்.

நம்பி ஆரூரர் திருநாவுக்கரசரைத் "திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரையன்" என்று போற்றுகின்றார். திருநாவுக்கரசரே 'திருநின்ற செம்மை' என்ற தொடரை,

"சிவனெனும் ஓசையல்லாது அறையோ உலகில்
திருநின்ற செம்மை உளதே?"

என்று ஆள்கின்றார். இத்தொடரில் "**செம்மை**" என்பது உண்மை என்னும் பொருளினதாய்ப் பரம்பொருளைக் குறிக்கும். பரம்பொருளை விட்டு நீங்காதுநின்று, அதனை உணர்தற்கு வாயிலாயுள்ள திருவருளையும் குறிக்கும். திருவருளை இறைவனே தரப்பெற்றால்தான் அவனை உணர இயலும். இதனையே மணிவாசகர், "அவனருளாலே அவன்தாள் வணங்கு" என்றார். இங்கு வணங்குதல், உணர்ந்து வணங்குதல். அவ்வாறு உணர்ந்து உரைத்தது திருவாசகச் சிவபுராணம்.

இவ்விளக்கத்தை உளங்கொண்டு நோக்கினால், மேலே காட்டிய திருநாவுக்கரசரது வாக்கு, 'சிவ என்னும் மந்திரம் (திருவைந்தெழுத்து) அன்றி, இவ்வுலகில் உள்ளோர்க்குத் திருவருளையும் பரம்பொருளையும் உணர்தற்கு வேறுவழி உள்ளதா? இல்லை' என்று பொருள்தரும். நம்பி ஆரூரரின் வாக்கு, "திருவருளுணர்வே தவம் எனக் கொண்ட திருநாவுக்கரசர்" என்று பொருள்தரும். ஏகாரம் பிரிநிலை ஆதலின், சமணரின் தவக்கொள்கை உண்மையைக் காட்டாது எனவும் அறியப்படும். செம்மை என்பதற்குத் தவம் என்ற பொருளும் உண்டு.

திருநாவுக்கரசர் எனச் சிறப்புப் பெயர் பெற்ற மருணீக்கியார், தமக்குச் சூலைநோய் வந்தபொழுது, தமக்கை சொல்லால் அதனைத் திருவருள் எனக் கொண்டார். எதனாலும் தீராது வருத்திய அந்நோய் சிவபிரானை வழிபட்டமையால் தீர்ந்தமையால், அதுவும் திருவருள் எனக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தனிச்சிறப்பு ஒன்று உண்டு. அது மருணீக்கியாரின் பண்புச் சிறப்பு. அவர் மாந்தர் அனைவரிடமும் அன்புடையவர். ஆதலின், தமது சூலை நோய் தீர்தற்கு மட்டும் இறைவனிடம் வேண்டிக் கொள்ளாது, மாந்தர் அனைவரின் துயரமும் நீங்குமாறு வேண்டிக்கொண்டார். அது பற்றியே சேக்கிழார்

"கோதில் திருப்பதிகம் போற்றால்
உலகேழின் வருந்துயரும்
போமாறு எதிர் நின்று புகன்றனர்"

என்றார். உலகத்துக்காக வேண்டுதல் செய்யும் அவரது பரந்துபட்ட அன்பையும் பாடிய பதிகத்தின் நயத்தையும் ஏற்றுப் பாராட்டும் முகத்தால் இறைவன் அவருக்கு "நாவுக்கரசு" என்னும் சிறப்புப் பெயர் வழங்கினான். அவ் அருட்செயலில் இருந்த குறிப்பை உணர்ந்த திருநாவுக்கரசர், இறைவனின் கருணைத் திறத்தையும், அருள்திறத்தையும் பாடுவதே பணியாகக் கொண்டார் . ஊர்தோறும் சென்று, திருக்கோயில்களில், நெஞ்சம் அன்பால் நெகிழ்ந்துருக, வாய் இறைபுகழைப் பாட, கைகளால் உழவாரப் பணி செய்து வாழ்தலை மேற்கொண்டார். ***அவ்வாழ்க்கையே திருநின்ற செம்மை*** அதாவது, ***திருவருள் வழி வாழ்ந்த வாழ்க்கை.***

அவர் அன்பு வடிவமாக இருந்து, திருவருள் வழி நின்றார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. அவரைக் கொல்லச் சூழ்ச்சிகள் செய்த சமணர்களிடத்தும் அவர் கோபங்கொள்ளவில்லை; வசைபாடவில்லை. சுண்ணாம்புக் காளவாயில் (நீற்றறை) அவரை இரக்கமின்றி, அவர்கள் அடைத்தபோது ஈசனடியார்க்குத் துயருளவோ? என மூண்ட மனம் நேர் நோக்கி, முதல்வனையே தொழுதிருந்தார். இங்கு "நேர் நோக்குதல்" திருவருளைச் சிந்தித்தல் ; திருவருள் உணர்வுக்கு ஆட்படுதல். அவ்வாறு அருளனுபவம் பெற்று இருந்தவரைச் சுண்ணாம்புக் காளவாய் என்ன செய்யும்? இந்த அருள் - அனுபவம் பெறும் முன்பு சூலை நோயால் ஒரு நாளேனும் பொறாது துடித்தவர், இப்போது உளங்குளிர்ந்து ஏழுநாள் அளவும் அமைதியாக இருந்தமையை உறழ்ந்து நோக்குக. இதனை உணர்ந்த சேக்கிழார், நீற்றறை, "அடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே" என்று பாடுகின்றார்.

நாவரசர் சமணர்களின் பிற சூழ்ச்சிகளையும் திருவருளினாலேயே வென்றார். அவரை மிதித்துக் கொள்வதற்காக அவர்கள் ஏவிய யானையை அவர் அன்போடு நோக்கியமை குறிக்கத்தக்கது. இதைக் கூறும் பொழுது சேக்கிழார், அன்பே அவரது கொள்கை என்கின்றார்.

அப்பூதியடிகள் குருபக்தியினால், தம் மகன் மீது செல்லும் பாசத்தை விட்டு, அவன் பாம்புதீண்டி இறந்தமையால் வந்த துயரையும், அவனது உடலையும் மறைத்து, நாவுக்கரசரை உணவுண்ண அழைத்தபொழுது அவரது அன்புள்ளம், திருவருளால் அப்பூதியடிகளின் நெஞ்சில் இருந்த துயரத்தை அறிந்துகொண்டது. சிறுவனது உடலைத் திருக்கோயிற் சன்னதியில் கிடத்தச் செய்து, இறைவனது திருவருளைப் பாடியே அவனை உயிர்ப்பித்தார். அவர் பாடிய பதிகத்தில் "சிறுவனுக்கு உயிர் தருக" என வேண்டிக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒத்த காலத்தவராகிய திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் அன்பால் உள்ளங்கலந்தமை, சைவத்தின் பெரும்பேறு. சேக்கிழார் இந்த நட்பை அன்பும் அருளும் சேர்ந்தமைப் போன்றது என்கின்றார். இங்கு, அவர் "உயிர்கட்கெல்லாம் அன்பு செறிக் கடல்" எனத் திருநாவுக்கரசரின் அன்பினைச் சிறப்பித்தும் "அருட் பெருகு தனிக்கடல்" என உயிர்கட்கு எல்லாம் இறையருள் வருவதற்கு வாயிலாக உள்ள ஒப்பற்ற கடல் எனத் திருஞானசம்பந்தரைச் சிறப்பித்தும் கூறுகின்றார்.

இதன் வழியே அறியும் உண்மை என்னவெனில் திருநாவுக்கரசரால் சைவம் தொண்டு நெறியாக - **மக்களை வாழ்விக்கும் நெறியாக** மலர்ந்தது ; திருஞானசம்பந்தர் வழியாக, **ஆன்மீக நெறியாக** மக்களுக்குத் தரப்பெற்றது என்பதாகும்.

இவ் இருபெருந்தகையாரும். திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தபோது, மக்கள் படும் பசித் துன்பத்தைக் கண்டு வருந்த, இறைவன் திருவருளால் அவர்களுக்குத் திருக்கோயிலில் பொற்காசுகள் கிடைத்தன. அவற்றைக் கொண்டு அவர்கள் இரண்டு மடங்களில் மக்களுக்கு இரண்டு வேளையும் உணவளித்தனர். முரசறிவித்து உணவளித்தனர் என்பதால் அனைவர்க்கும் அளித்தமை தெளிவாம்.

திருஞானசம்பந்தரைப் பிரிந்தபின், திருநாவுக்கரசர் தொண்டை நாட்டுத் தலங்களை வணங்கி திருக்கயிலைமலைக்குச் செல்லும் நோக்குடன் பல நாடுகளைக் கடந்து, கற்கள் நிறைந்த நெடுவழி ஒன்றை அடைந்தார். அங்கு தொடங்கிய பயணம் அவரது அளப்பிலா அன்பிற்கும் அயரா மனவுறுதிக்கும் சான்றாகும். கடத்தற்கு அரிய காட்டு வழியை நடந்தும், காற்பரடுகள் தேய்ந்தும் போனமையால் கைகளால் ஊன்றியும், தரவியும், மார்பினால் உந்தியும், புரண்டும் சென்று, இறுதியில் வலிமை குன்றிச் செயலற்றுக் கிடந்தார். அந்நிலையில் ஒரு முனிவர் எதிர்ப்பட்டு "நீர் கயிலை செல்ல இயலாது" என்றார். நாவரசர் "கயிலை காணாமல்

மீளேன்" என மறுத்தார். உடல் சாவது உறுதி. அதைக்கொண்டு, மீண்டு செல்வதால் நன்மை என்ன என்று அவர் எண்ணினார். ஆனால் வேறு வகையாக எண்ணினான் இறைவன். முனிவர் அங்குத் தோன்றிய ஒரு பொய்கையைக் காட்டி, அதில் மூழ்கித் திருவையாற்றில் உள்ள பொய்கையில் எழுமாறு கூறி அங்குக் கயிலாயக் காட்சியைக் காட்டுவதாகவும் கூறினார்.

அதன்படியே நாவரசருக்குத் திருவையாற்றில் கயிலைக் காட்சி வாய்த்தது. எவ்வாறு? அங்கு இறைவன் *சக்தி-சிவமாக* எழுந்தருளியிருந்ததோடு, உயிர் இனங்கள் எல்லாம், ஆணும் பெண்ணுமாக உள்ளவை எல்லாம் சக்தி- சிவமாகக் காட்சியளித்தன. இது எதைக் காட்டுகின்றது? உயிர்க்குலம் எல்லாம் இறைவன் உறையும் உண்மையே அன்றோ? நாம் இவ் உண்மையை உணர்ந்து தொண்டு செய்து இன்னும் வாழவேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம் என்று அறிந்த நாவரசர், திருப்பூந்துருத்தியில் மடம் நிறுவித் தங்கி, தலங்களை வணங்கிப் பதிகம் பாடியும் உழவாரப்பணி செய்தும் சிவநெறி வளர்த்து, திருப்புகலூரில் வீடுபேறடைந்தார். அவரது உடம்பு ஞான உடம்பாகி, இறைவனுடன் கலந்தது. பாடும் பணியால் சைவம் பரப்பினார் நாவரசர்.

அடுத்துப் போற்றப்படுபவர் குலச்சிறையார். தொண்டை நாட்டில் சமண சமயத்தை வென்ற திருநாவுக்கரசரை அடுத்து, பாண்டிய நாட்டில் அச்சமயம் நீங்கக் காரணமாக இருந்த குலச்சிறையாரின் வரலாறு கூறப்படுவது, சைவநெறி பரப்பியவர்களைப் போற்ற எடுத்துக்கொண்ட பகுதியின் ஒருமையைக் காட்டுகிறது. மேலும் நாவரசு வரலாற்றில் இடம்பெறும் திருஞானசம்பந்தரே, பாண்டிய நாட்டுச் சைவ மறுமலர்ச்சியின் ஆளுநராகவும், குலச்சிறையாரின் குருவாகவும் விளங்குகிறார்.

மதுரையரசின் தலைமை அமைச்சராக விளங்கிய குலச்சிறையாரின் துன்பம் பெரிது. பாண்டிய மன்னனும் மக்களும் சமணசமயத்தைச் சார்ந்தோர். குலச்சிறையார், மன்னன் சினங்கொள்ள இடங்கொடாமலும், மக்களின் ஒத்துழைப்பு இன்றியும் ஆலயப்பணியை, அரசியார்க்குத் துணையாக, தாமே செய்ய வேண்டியிருந்தது. அவ்விருவர் மட்டுமே நாள்தோறும் ஆலயத்தில் பணியனைத்தும் செய்து வழிபட்டனர் எனத் திருஞானசம்பந்தர் தமது பதிகத்தில் கூறுகின்றார். அவரை மதுரைக்கு அழைத்துச் சமணரோடு வாதம் நடத்துவிப்பதிலும் பாண்டிய நாட்டில் மீண்டும் சிவநெறி தழைக்கச் செய்தலிலும் குலச்சிறையாருக்குப் பெரும்பங்குண்டு.

அடுத்து, நம்பி ஆரூரரைக் குருவாகக் கொண்டு, யோகநெறி நின்றும், அடியார் பணிசெய்தும் உயர்கதிபெற்ற பெருமிழலைக் குறும்பர் போற்றப்படுகின்றார். மிழலை இவரது ஊர். குறும்பர் சாதிப்பெயர். இவையன்றி, இவர் இயற்பெயர் தெரிந்திலது. நம்பியாரூரர் கயிலைசென்றார் என்று அறிந்தபோது, குருவை எங்ஙனம் பிரிந்திருப்பேன்? அவருக்கு முன் கயிலை சேர்ந்து அவருக்குப் பணி செய்வேன் என்று யோக முயற்சியால் உச்சந்தலை வழியாக பிரிந்து சென்று கயிலை அடைந்தார். சமயம் பரப்பும் பணியில் இவர் நம்பியாரூரருக்குத் துணை நின்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. இக்கருத்தை இடம் நோக்கிக் கொள்கின்றோம்.

பெரியபுராணத் தொண்டர்களுள் அன்பிற் சிறந்தவராகக் கண்ணப்பரைக் கண்டோம். ஆனால், அவரினும் சிறந்தவராகக் காரைக்கால் அம்மையார் விளங்குகின்றார். இறைவனோடு அடியார் கொள்ளும் உணர்வு அடிப்படையிலான உறவுநிலைகளுள், சிவநெறியில் மிக்க அரிதாகக் காணப்படும் "தாய்-சேய் உறவு" காரைக்காலம்மையாரின் வாழ்வில் புலப்படுகிறது. அவ்வுறவின் உணர்வு நிறைவாக, இறைவன் அவரை, அன்பு பொங்க, பரிவு மேலிட, "அம்மையே" என அழைத்த உளமுருக்கும் நிகழ்ச்சி நிகழ்ந்தது. அதன் அடையாளமே காரைக்கால் அம்மையார் என்னும் பெயர். பெருமான் திருநடனம் ஆடும்போது, திருவடி அருகே பாடும்பணி செய்து வாழும் பெரு வரமும் அம்மையார் வேண்டிப் பெற்றார்.

அவரது இயற்பெயர் புனிதவதி. பிறந்து, மொழிபயின்ற பருவத்திலேயே சிவபெருமான் திருப்பெயர்களைச் சொல்லிச் சொல்லிப் பயின்றார். தளர்நடைப் பருவத்திலும், ஒத்த வயதுச் சிறுமியரோடு விளையாடிய போதும், விளையாட்டுப் பொருள்களுக்குச் சிவனது பெயர்களையே சூட்டினார். அவர் வளர வளர, அவரது இறையன்பும் வளர்ந்தது. மங்கைப் பருவத்தில் அவளுக்கு வாய்த்த கணவனுக்கும், அவருக்கும் உணர்வில் இருந்த வேறுபாட்டைச் சேக்கிழார்,

"தளிரடிமென் நகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்கு
களிமகிழ் சுற்றம் போற்றக் கலியாணம் செய்தார்கள்"

என்று உருவகத்தால் புலப்படுத்துகிறார்.

புனிதவதியாருக்கு இளமையில் தொடங்கிய இறையன்பு இல்லறத்திலும் தொடர்ந்தது. பெருகி வளர்ந்தது. கணவன் பரமதத்தன் மற்ற எல்லோரையும் போல உலகியல் உணர்வு மட்டும் உடையவனாக

இருந்தான். மனைவியிடம் மிக்க அன்பு செலுத்தினான். குடும்பத்தின் செல்வத்தை உயர்த்துவதிலேயே கருத்தாயிருந்தான். புனிதவதியார் கற்புக்கடமை தவறாமலும் மனையறங்கள் குறையாமலும் குடும்பம் நடத்தியதுடன் இறைபணியும் செய்துவந்தார். தம் மனைக்கு அடியார் விருந்தாக வந்தால் அவர்கட்கு வேண்டுவன கொடுத்து உபசரிப்பதில், அவரது இறையன்பு ஓர் அனுபவமாகத் திருவருள் உணர்வு பெறும் இணையற்ற வாய்ப்பாக மலர்ந்தது. சேக்கிழார் இதனை, "உம்பர் பிரான் திருவடிக்கீழ் உணர்வு மிக ஒழுகுநாள்" என்று கூறுகிறார். இந்த அனுபவத்தால் விளைந்த இன்பத்தை அவர் பின்னாளில் "இறவாத இன்ப அன்பு" எனக் குறிப்பிடுகின்றார்.

அடியார்களைச் சிவமாகவே பாவித்து அன்பு செலுத்துவதாலும் திருவருளை உணர முடியும் என்ற உண்மை இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த உண்மையே சைவத்தில் "**சங்கம பத்தி**" என்னும் "**அடியார் வழிபாட்டுக் கொள்கையாக**" வகுக்கப்பட்டது.

புனிதவதியார், தமது கற்புக்கடமையும் இறையன்பும் தம்முள் மாறுபடாதவாறு குடும்பம் நடத்தியபோது, அதற்கும் சோதனை வந்தது. ஒருநாள் பரமதத்தன், தன் கடைக்கு வந்தோர் தந்த இரண்டு மாங்கனிகளை மனைக்கு அனுப்பினான். புனிதவதியார் பகலுணவு நேரத்திற்கு முன்பு விருந்தாக, மிக்க பசியோடு வந்த ஓர் அடியாருக்குச் சோற்றமுதுடன், கறியமுது சமைக்கப்படாமையால், மாங்கனிகளுள் ஒன்றைப் படைத்து, உணவு அளித்து அனுப்பினார். பகலில் மீதியிருந்த ஒருகனியைக் கணவனுக்குப் பரிமாறினார். அவன் அதன் சுவை மிகுதி கொண்டு இதுபோன்று இன்னும் ஒரு கனி உள்ளது. அதனைக் கொணர்க என்று கூறினான். உள்ளதா என்று வினவாமல் கொண்டு வர ஆணையிட்டமையால் சிவனடியார்க்கு அளித்ததைக் கூற அஞ்சினார் புனிதவதியார். தனியிடம் சென்று, தம் நிலையை மறந்து திருவருளைச் சிந்தித்தார்.

இறைவன் கனியையே ஏதுவாகக் கொண்டு அவரை ஆட்கொள்ள திருவுள்ளம் பற்றினான். அவரது கையில் மிக்க சுவைக் கனி ஒன்று வந்து அமர்ந்தது. அதனை உண்ட கணவன் இது நான் அனுப்பியதன்று எங்குப் பெற்றாய்? என்று வினவினான். விடை சொன்னால் மரபுப் பிழை. சொல்லாவிட்டால் கற்புக் குற்றம். எனவே, நிகழ்ந்தபடி கூறினார் புனிதவதியார். அதை நம்பாத அவன், "திருவருள் எனில், மற்றொரு கனி வரவழை" என்றான். புனிதவதி மீண்டும் தனியிடம் சென்று "இறைவா! இங்கு மற்றொரு கனி தந்தருளாவிடின் நான் கூறியது

பொய்யாகும்" என்றார். அவர் கையில் மற்றொரு கனி வர அதனைக் கணவர் அதிசயத்து வாங்கியபோது அது மறைந்தது. அது கண்டு அவரைத் தெய்வம் எனக் கருதி விலகி வாழ்ந்தான். பின்பு கலமேறி வெளிநாடுகளில் பெருநிதி ஈட்டி வந்து பாண்டி நாட்டில், ஒரு பெண்ணை மணந்து பெண்மகவு ஒன்று பெற்று வாழ்ந்தான்.

உறவினர் புனிதவதியாரை அவனிடம் அழைத்துச் சென்ற பொழுது, அவன் மனைவியோடும் மகளோடும் வந்து அவரை வணங்கினான். அவன் பிரிந்திருந்த காலத்தில் பற்றனைத்தையும் விட்டிருந்த புனிதவதி, இப்போது அவனுக்காகத் தாங்கியிருந்த உடற்பற்றையும் விட்டு, தனக்கு என்பே உடலாகத் தருமாறு இறைவனிடம் வேண்டிப் பெற்றார்.

பேயுடலின் தலையால் நடந்து, கயிலாயம் சென்ற போது, இது காறும் அவர் உள்ளத்தில் இறைவனிடம் ஒரு தாய் கொள்ளும் அன்பு குடி கொண்டிருந்ததை உணர்ந்த இறைவன், அவரை "அம்மையே" எனப் பரிவுபொங்க அழைத்தான். அவரும் நெகிழ்ந்துருகி, "அப்பா" என்று அழைத்து மகிழ்ந்தார். இறைவனிடம் "இன்ப அன்பையே" வேண்டினார். ஒரு தாயாக நின்று, இறைவனிடம் செலுத்திய பேரன்பு, மக்கள் முதலிய எல்லா உயிர்கள் மீதும் பரவியமையால் இப்போது வரம் வேண்டினார். அந்த அன்பின் காரணமாகவே, மக்களின் வாழ்க்கை செம்மையுற்று உயர்ந்து சிறக்கும் பொருட்டு, அற்புதத் திருவந்தாதி, இரட்டைமணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகிய தோத்திரப் பாமாலைகளைப் பாடினார். அவை சைவ சமய மறுமலர்ச்சி இலக்கியத்திற்குத் தோற்றுவாயாக அமைந்தன.

பக்திநெறி நின்றோர் இறைவனோடு பலவகையாக உறவுமுறைகளை ஏற்படுத்திக்கொண்டு, அன்பை வளர்ப்பதற்கும், அந்த அன்பால் இறவாத இன்பம் பெறுவதற்கும் காரைக்காலம்மையார் வழிகாட்டியாக உள்ளார்.

சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும்

முனைவர் இரா. கோதண்டராமன்
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்
88, தொல்காப்பியர் வீதி , அசோக் நகர்,
புதுச்சேரி-605 008, தொலைபேசி : 0413-2251044

1.0 திரிபில் விளையும் ஆய்வுத் தடங்கள்

1.1 சொன்மைத் திரிபோடு இணைந்த பொருண்மைத் திரிபு என்பது மொழிகளில் இயல்பாகக் காணப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். திரிபு என்பது பொதுவாக வளர்ச்சியின் படிநிலையாகும். பொருண்மைத் திரிபும் சொன்மைத் திரிபும் இதற்கு விலக்கல்ல. சொற்களஞ்சியத்தை வளப்படுத்துவதில் பொருண்மைத்திரிபின் பங்களிப்பு கணிசமானதாகும். சொன்மைத் திரிபு என்பது பொருண்மைத் திரிபினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆகவே சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவையாகும். *உர்* என்ற சொல்லினைக் கருத்தில்கொண்டு, பொருண்மைத் திரிபு எங்ஙனம் மொழியின் சொன்மைத் திரிபுக்கு, அதாவது சொல்வளத்துக்கு உறுதுணை புரிகின்றது என்பது பற்றி அறிமுக நிலையில் இங்கே சிந்திக்கப்படுகிறது. அத்துடன் (-*உங்க்உ, -*உந்த்உ, -*உம்பஉ முதலான கழிநெடில்) இலக்கண உருபன்கள் (Grammatical Morphemes) பகுதிப்பொருள் விகுதிகளாக (Pleonastic Suffixes) நிலை மாறும்போது சந்திக்கநேரிடும் சிக்கல்களை இனங்கண்டு அவற்றை எதிர்கொள்வதற்கான உத்திகளைக் கண்டறியும் முயற்சியும் இங்கே சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.2. *உருப்பம்* என்ற சொல் தமிழில் வெப்பம் என்று பொருள்படும். *உருப்பு* என்பது இதன் பகுதியாகும். இந்தப் பகுதியானது வரலாற்று நிலையில் *உரும்* என்பதன் அடியாக அமைந்ததாகலாம். *கரும்* என்பதன் வேர்ச்சொல் *கர்* என்பதைப் போல *உரும்* என்பதன் வேர்ச்சொல் *உர்* என்பதாகும். வண்ணனை ஆய்வில் *உருப்பு* என்பதை உரும்+ப்உ என்ற அமைப்பினதாகக் கொண்டாலும், *உர்+உம்ப்உ* என்ற அமைப்பினதாகக் கொண்டாலும் *-ப்உ, -உம்ப்உ* ஆகியவற்றின் இலக்கணப் பொருண்மையைச் சுட்டமுடியவில்லை. *உருப்பு* என்பதை *உர்+உம்ப்உ* என்ற அமைப்பினதாகக் கொண்டால் *உர்* என்பதை வினையடியாகவும் *உம்ப்உ* என்பதைப் பகுதிப்பொருள் விகுதியாகவும் கொள்ளலாம். மாறாக, *உரும்+ப்உ* என்ற அமைப்பினதாக மறுபகுப்பாய்வு

செய்தால் *உரும்* என்பதை வினைப்பகுதியாகவும், *-ப்உ* என்பதைப் பகுதிப்பொருள் விகுதியாகவும் கொள்ளலாம். வினையடிக்கும் வினைப்பகுதிக்கும் உள்ள வேறுபாட்டைக் கருத்தில் கொள்க. இதுபோன்ற ஆய்வுச் சிக்கலை இந்த ஆய்வில் மீண்டும் நாம் சந்திக்க வாய்ப்புள்ளது. *உருத்தல்* என்பது வெப்பம் செய்தல் என்ற பொருண்மையைக் குறிக்கும். செய்தல் வாய்பாட்டினதாகிய இச்சொல் *உருத்து* என்ற இறவாக்காலச் செய்து வாய்பாட்டு வினையின்மீது அமைந்ததாகும். இந்த வினையானது செயுத்து (<*செயுந்த்உ) வாய்பாட்டினதாகும். இதனின்றும் *உருத்து* என்பதன் அடிநிலை வடிவம் **உருந்த்உ* என்பதும் அதன் அமைப்பு *உர்+உந்த்உ* என்பதும் புலனாகின்றன. *உம்உந் தாகும் இடனுமார் உண்டே* (சொல். சேனா. 292) என்ற தொல்காப்பிய ஆய்வினைக் கருதுக. *உந்து* என்பதை *உம்* என்பதன் நீட்சியாகக் கொண்டு இரண்டையும் உறழ்ச்சி வடிவங்களாகக் கொள்வார் தொல்காப்பியர். *உருப்பு* என்பதன் அடிநிலை வடிவத்தை **உர்+உம்ப்உ* என்ற அமைப்பினதாகக் கருதுவதற்கு இது ஒரு உந்துதலாக இருந்தாலும், *-உம்ப்உ* என்பது இந்த அமைப்பில் இலக்கண விகுதி அல்ல என்பது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

1.3 *உருத்து எழுகுரல குடிஞைச் சேவல்* (அகம் 89.3) என்பதில் நிகழும் செய்து வாய்பாட்டு இறந்தகால வினையானது, *உரும்+த்உ* என்ற அமைப்பினதாகும். இந்த அமைப்பில் உரும என்பது வினைப்பகுதியும் குற்றுகரத் தகரம் இறந்தகாலக் கிளவியும் ஆகும். முலைபொலி யாகம் *உருப்ப நூறி* (புறம் 25.10) என்பதில் நிகழும் *உருப்ப* என்பது *உருப்பு* என்னும் வினைப்பகுதியைக் கொண்ட செயவென் வாய்பாட்டு வினையாகும். *உருப்பம்* என்ற பெயரின் பகுதிக்கு மேலே நிகழ்த்திய படிநிலை ஆய்வே (அதாவது, உர்+உம்ப்உ) என்பதே *உருப்ப* என்பதில் நிகழும் வினைப்பகுதிக்கும் பொருந்தும். இந்த அமைப்பில் நிகழும் *-உம்ப்உ* என்பது தொல்காப்பியரின் உந்தென் கிளவிக்கு இணையானதாகும். ஆனால் *உருப்பு* என்பதன் ஆய்வில் *-உம்ப்உ* என்பது பகுதிப்பொருள் விகுதி என்பதே நினைவில் கொள்ளவேண்டும். இதனின்றும் *உரும்* என்பது பகுதிப்பொருள் விகுதி என்பதே நினைவில் கொள்ளவேண்டும். இதனின்றும் *உரும்* என்பது *உர்+உந்த்உ உம்ப்உ, உரும்+த்உ* என்று இருநிலைகளில் செயல்படுவது புலனாகின்றது. *-உந்த்உ, -உம்ப்உ*, மற்றும் *உருகு / உருக்கம்-உருக்கு* ஆகியவற்றின் அடிநிலை வடிவத்தில் நிகழும் *-உங்க்உ* ஆகியவற்றில் காணப்படும் *-உம்* என்பது

உரும் என்பதில் நிகழ்வதாகும். மறு பகுப்பாய்வில் இந்த உம்மைக்கிளவி குற்றுகர வல்லொற்றுக்களைச் சார்ந்து நிகழ்கிறது. *வெயிலவிர் உருப்பு* (அகம் 57.3) *நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காடு* (அகம் 11.2) ஆகிய பெயர்த் தொடர்களில் *உருப்பு* என்பது பெயரின் தன்மையதாக நிகழ்கிறது. இதுவும் *உர்+உம்ப்உ* அல்லது *உரும்+ப்உ* என்ற அமைப்பினதாகும். வெயில் எரிக்கும் நண்பகற்பொழுதினை *உருமம்* என்று இன்றைய தமிழில் குறிக்கப்படுகிறது. இச்சொல் *உரும்* என்ற பகுதியின் அடியாகத் தோன்றியதாகும். பழந்தமிழில் உரும் என்பது இடியைக் குறிக்கும். *படுமழை உருமின் இரங்கும் முரசு* (புறம் 350.4) என்ற பெயர்த் தொடரில் *உரும்* இப்பொருண்மையதாக நிகழ்வதை அறியலாம். *உர், உரும், உருமம், உருப்பு, உருப்பம் உருத்து, உருத்தல்* ஆகியவை வெப்பம் என்ற பொதுப் பொருண்மையினை மையமாகக் கொண்டு அமைந்த சொற்களாகும்.

2.0 எந்தத் தடம் ஏற்புடையது?

2.1 உருகுதல் என்னும் பொருண்மையதாகிய உருகு என்னும் வினையும் அதனோடு தொடர்புள்ள உருக்கம் என்னும் வினைப் பெயர்க்கிளவியும் *உர், உரும், உருப்பு,* முதலானவற்றுடன் பொருண்மையடிப்படையில் தொடர்புடையனவாகும். *உர்* என்பதன் வினையடியாக அமைந்த *உருகு* என்னும் வினைவடிவம் **உருங்கு* (<உர்+உங்கு) என்பதினின்றும் மெல்லொலி கெட்டுத் தோன்றியதாகும். *உர்* என்பது செயப்படுபொருள் குன்றிய வினையாயின் *உருகு* என்ற வினையையும் *உருக்கம்* என்ற வினைப்பெயர்க் கிளவியையும் செயப்படுபொருள் குன்றாவினையாயின் *உருக்கு* என்ற வினையையும் தோற்றுவிக்கும். இதனைப் பின்வரும் சந்தி விதிகள் மூலம் வருவிக்கலாம்.

(1) (1) உர் (+குன்றுகை) + உங்க்உ = *உருங்க்உ
    (2) உருங்க்உ>உருங்கு (ககரம் அலையொலியாகத் திரிதல்)
    (3) உருங்கு>உருகு (ங்>0/-க் அலையொலி)
(2) (1) உருங்க்உ>உருக்கு/-அம் (ங்>க்/-க்)
    (2) உருக்கு>உருக்க்/-அம் (கு>0/-உயிர்)
(3) (1) உர் (-குன்றுகை)+உங்க்உ = *உருங்க்உ
    (2) *உருங்க்உ>உருக்கு (ங்>க்/-க்)

2.2. மேல் பத்தியில் (2.1-இல்) நிகழ்த்தப் பெற்றுள்ள ஆய்வானது *பெருகு/பெருக்கம்-பெருக்கு, விலகு - விலக்கு, பழகு/பழக்கம் - பழக்கு, பருகு, கலங்கு/கலக்கம் - கலக்கு, அஞ்சு- அச்சம், நெருங்கு/நெருக்கம்-*

நெருக்கு, சுருங்கு சுருக்கம்-சுருக்கு, குலுங்கு - குலுக்கு முதலானவற்றுக்கும் பொருந்தும். இந்த எடுத்துக்காட்டுக்களில் நிகழும் வினையடிகள் முறையே **பெர், *விலய், *பழய், *பர், *கலய், *அய், *நெர், *சுர், *குல்* எனக் கோட்பாட்டு நிலையில் மட்டும் இனங்காணப்படும். இங்கே இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். *உருகு/உருக்கம், உருக்கு* ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் *உர் (+குன்றுகை)+உங்க்உ, உர் (-குன்றுகை)+உங்க்உ* எனக் குறிக்கப்பெற்றுள்ளன. உருத்தல் என்பதன் இறவாக்காலப் பகுதியாகிய *உருத்து* என்பதன் அடிநிலை வடிவத்தையும் இதேபோல் *உர் (?-குன்றுகை)+உந்த்உ* எனக் கருதலாம். *அல்* என்பதன் இலக்கணப் பொருண்மை தெற்றெனப் புலப்படாமையின் *உருத்து* என்பதில் நிகழும் இறவாக்காலக் கிளவியாகிய குற்றுகரத் தகரத்தின் பொருண்மையை அது பகிர்ந்து கொள்கிறது. எனவே, *-உந்த்அல்* என்ற கழிநெடில் விகுதியை இங்கே கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது. இதனைத் தொடர்ந்து *உருத்தல்* என்பதை *உர் (?-குன்றுகை)+ உந்த்அல்* என்ற அமைப்பினதாகக் கருதலாம். மாறாக, *உரும் (?-குன்றுகை)+தல்* எனக் கொண்டால் இந்த அமைப்பில் *உரும்* என்பது வினைப்பகுதியாகவும் -தல் என்பது இறவாக்காலக் கழிநெடில் விகுதியாகவும் கொள்ளப்படும். *அல்* நிகழாதவிடத்து *உருத்து* என்பது **உர் (?-குன்றுகை)+உந்த்உ* என்ற அமைப்பினதாகக் கொள்ளப்படும். ஆனால் *உருத்து* என்ற இறந்தகாலத் தன்மையதாகிய செய்து வாய்பாட்டு வினையானது முன்பே குறிப்பிட்டது போல் *உரும் (?குன்றுகை)+த்உ* என்ற அமைப்பினதாகக் கொள்ளப்படும். காரணம் இதில் நிகழும் குற்றுகரத் தகரம் இறந்தகாலப் பொருண்மையதாகும்.

2.3. *உருகு/உருக்கம், உருக்கு, உருப்பு, உருத்து* (இறவாக்காலம்) ஆகியவற்றின் அடிநிலை வடிவங்களின் விகுதிகளை *-உங்க்உ, -உம்ப்உ, -உந்த்உ* எனக்கொள்வது ஒருவகை ஆய்வாகும். இதனை மறுபரிசீலனை செய்ய வாய்ப்புள்ளது. பழந்தமிழில் *அளித்தும்* (=அளிப்போம்), *அளித்தி* (=அளிப்பாய்), அளித்திர் (=அளிப்பீர்) என்பன போன்ற இறவாக்காலச் சிறப்பு வினைமுற்றுக்களின் நிகழ்ச்சி காணப்படுகின்றது. எடுத்துக்காட்டில் உள்ள வினைமுற்றுக்கள் *அளித்து* என்ற இறவாக்காலப் பகுதியின் (Non-Past Base) மீது அமைந்தவையாகும். இதன் அமைப்பு *அளி+ந்த்உ* என்பதாகும். இந்த அமைப்பில் *-ந்த்உ* (<உந்த்உ) என்பது இறவாக்காலப் பொருண்மையை உணர்த்தும். இது -*உந்த்உ என்பதன் மாற்றுருபாகும். *அளித்து* என்பதை *அளிம்+த்உ* என்ற அமைப்பினதாகக்

கொண்டால் *அளிம்* (<அளிய்ம் <*அளியும்) என்பது வண்ணனை ஆய்வில் வினைப்பகுதியாகவும் அதனையடுத்து நிகழும் குற்றுகரத் தகரம் இறவாக்காலக் கிளவியாகவும் கொள்ளப்படும். இந்த மாற்று ஆய்வானது (இறவாக்) காலப்பகுதிகளுக்கும் (Non-Past Base) பொருந்தும். முற்று வினைப்பகுதிகளாகிய *உருகு-உருக்கு, கலங்கு-கலக்கு, பருகு, குழம்பு-குழப்பு* முதலானவற்றுக்கும் பொருந்தும். கருதுக: *உரும் (+குன்றுகை)+க்உ=உருங்க்உ>உருங்கு>உருகு ; உரும் (+குன்றுகை)+க்உ = உருங்க்உ>உருக்கு* முற்று வினைப் பகுதிகள் தொடர்பான இந்த ஆய்வில் முன்பே குறிப்பிட்டதுபோல் குற்றுகர வல்லொற்றுகள் பகுதிப்பொருள் விகுதிகளாகக் கருதப்படும். *உர் (±குன்றுகை)+உங்க்உ* என்ற ஆய்விலும் *-உங்க்உ* என்பது பகுதிப்பொருள் விகுதிதான். இரண்டனுள் முந்தைய ஆய்வானது செயுந்து (<*செயுந்த்உ) வாய்பாட்டு வினையின் மீதமைந்த தொல்காப்பிய ஆய்வுக்கு மாறுபட்டதாயினும் அதனை நாம் புறக்கணித்து விடமுடியும் என்று தோன்றவில்லை.

2.4. மேலே இரண்டு வகையான ஆய்வுத்தடங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஒன்று வினையடியையும், (எ-டு. உர் (±குன்றுகை) +உங்க்உ) பிறிதொன்று முற்றுவினைப் பகுதியையும் (எ-டு. உரும் (±குன்றுகை)+ங்க்உ) கருத்தில் கொண்டதாகும். இவற்றுள் கோட்பாட்டு நிலையில் எதனைச் சிறந்த ஆய்வுத்தடமாக மதிப்பீடு செய்வது? முற்று வினைப்பகுதி என்பது வினையடியின் மீது அமைந்ததாகும். *உருகு, உருக்கு* ஆகியவற்றைக் கருத்தில் கொள்க. எனவே வரலாற்று நிலையில் *உரும் (+குன்றுகை)+க்உ* என்பது பிந்தியதாகின்றது. இதனைக் கருத்தில்கொண்டு வரலாற்று நிலையில் முந்தையதும், வினையடியின் மீது அமைந்ததும், (தொல்காப்பிய ஆய்வுக்கு இசைந்ததும்) ஆகிய *உரும் (±குன்றுகை)+உங்க்உ* என்ற ஆய்வே சிறந்ததாக இங்கு மதிப்பீடு செய்யப்படுகிறது. ஆயினும் இறந்தகாலச் செய்து வாய்பாட்டு வினைகளைப் பொறுத்தவரை அவை *செய்ம் (±குன்றுகை)+த்உ* என்ற ஆய்வே முதன்மையானதாகக் கொள்ளப்படும். இந்த ஆய்வில் செய்ம் வாய்பாட்டு வடிவங்கள் வினைப்பகுதிகளாகக் கருதப்படும்.

3.0 பொருண்மைச் சுட்டு

3.1. ஒரு வேர்ச்சொல் (Root) அல்லது பகுதியின் (Base) அடியாகத் தோன்றும் பல்வேறு சொற்களின் சொல்வகை (Lexical Category), பொருண்மைச் சுட்டு (Semantic Representation) ஆகியவை

ஒன்று போல இருக்கமுடியாது ; இருக்கவேண்டும் என்ற நியதியும் இல்லை. *உர்* என்பது வினையாகவும், *உரும்* என்பது பெயராகவும் இருவேறு சொல்வகைகளுக்கு உரியனவாக நிகழ்தல் கருதற்பாலதாகும். இதேபோல் *உரும்* என்பது இடி என்னும் பொருண்மையையும், *உருப்பு/ உருப்பம்* என்பது வெப்பம் என்பதனையும், *உருகு* என்பது *உருகுதற்* பொருண்மையையும் உணர்த்துவதை அறியலாம். இதனின்றும் சொன்மை நிகழ்ச்சிக்குப் பின்புலமாக இருப்பது பொருண்மைச் சுட்டு என்பது புலனாகின்றது.

3.2. வேர்ச்சொல் அல்லது பகுதியானது பொருண்மைத் திரிபுக்கு உட்படுகையில் அதன் அடியாகத் தோன்றியமையும் சொற்களின் பொருண்மையானது வேர்ச்சொல் அல்லது பகுதியின் பொருண்மை வரம்பினை மீறிச் செல்வதில்லை. பொருண்மைத் திரிபு என்பது ஒரு முளைக்குச்சியில் கட்டப்பட்ட மாடு கயிற்றின் நீளத்துக்கேற்ப ஒரு குறிப்பிட்ட பரப்புள்ள வட்டத்திற்குள் தனது மேய்ச்சல் களத்தை அமைத்துக்கொள்வதற்கு இணையானதாகும். *உர், உரும், உருப்பு/ உருத்து, உருகு, உருத்து* ஆகிய சொற்கள் ஒரே பொருண்மையனவாக இல்லையென்றாலும் வெப்பம் என்ற ஒரு பொதுவான பொருண்மை வரம்புக்குள் அவை நிகழ்வதைக் காணலாம்.

4.0 பொருண்மைத் திரிபு விதிகள்

4.1. பொதுவான பொருண்மை வரம்புக்குள் (Common Semantic Range) நிகழும் பொருண்மைத் திரிபுகள் மொழியின் சொல்வளத்தைப் பெருக்க உறுதுணை புரிகின்றன. விகுதிகள் இத்தகைய சொல்வளத்திற்கு ஏற்ற சூழல்களாக அமைகின்றன. கருதுக ; *கலங்கு-கலக்கம், பருகு-பருக்கை, கத்து/கத்/கொத்* (DED 1014)*-கதிர், வற்று -வற்றல்*. குறிப்பிட்ட வேர்ச்சொல் அல்லது பகுதியினை அடுத்து நிகழும் பல்வேறு விகுதிகள் பொருண்மைத் திரிபு மரபுகளைக் கட்டுப்படுத்தும் கருவிகளாகச் செயல்படுகின்றன. ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனை விளக்கலாம். *பகை, பகல்* இரண்டும் *பகு* என்பதனோடு பொருண்மைத் தொடர்புள்ள ஆனால் வரம்பு இகவாத பொருண்மைத் திரிந்த சொற்களாகும். இதேபோல் *மயில், மயிர்* இரண்டும் கருமைப் பொருண்மையதாகிய *மய்* என்பதனோடு பொருண்மைத் தொடர்புள்ளவையாகும். இவற்றில் காணப்படும் பொருண்மைத் திரிபினை *ஐ, அல், இல், இர்* ஆகிய விகுதிகள் நெறிப்படுத்துகின்றன. *பகுத்தல்* என்னும் பொருண்மையதாகிய *பகு* என்னும் வடிவம் *ஐ* என்னும் விகுதியின் முன் பகைமைப் பொருண்மையினையும், *அல்* என்பதன் முன் பகற்பொழுதினையும்

குறிப்பதாகின்றது. இதேபோல் *மய்* என்பதன் பொருண்மை *இல்* என்ற விகுதியின் முன் ((மயில்)) என்ற பொருண்மையதாகவும் *இர்* விகுதியின் முன் ((மயிர்)) என்ற பொருண்மையதாகவும் திரிந்தமைகின்றது. இதனைப் பின்வரும் பொருண்மைத் திரிபு விதிகள் மூலம் (Semantic Alternant Rules) தெளிவுபடுத்தலாம்.

2 (1) பகு ((பகுத்தல்))>பகு ((பகைமை)) /- ஐ
(2) பகு ((பகுத்தல்))>பகு ((பகற்பொழுது)) /-அல்
3 (1) மய் ((கருமை))>மய் ((மயில்)) /-இல்
(2) மய் ((கருமை))>மய் ((மயிர்)) /-இர்

இந்த விதிகளில் ((பகுத்தல்)) ((கருமை)) என்பன பொருண்மை முதலிகள் (Semantic Primes) ஆகும். ((பகைமை)), ((பகற்பொழுது)), ((மயில்)), ((மயிர்)) ஆகியவை பொருண்மைத் திரிபன்கள் (Semantic Varients) எனக் குறிக்கப்படும். பொருண்மைத்திரிபு தொடர்பான ஆய்வில் *பகுத்தல், பகைமை, பகற்பொழுது, கருமை, மயில், மயிர்* ஆகிய பொருண்மைக் கூறுகள் (Semantic markers) (( )) என்ற இரட்டைப் பிறைக்குறி அடைப்புக்குள் குறிக்கப்படும்.

4.2. *உர், உரும், உருப்பு, உருகு, உருக்கு* முதலானவற்றில் காணப்படும் பொருண்மைத் திரிபுகளையும் மேலே குறிப்பிட்டது போன்ற பொருண்மைத்திரிபு விதிகள் மூலம் விளக்கலாம். *இடி* என்னும் பொருண்மையதாகிய *உரும்* என்பதை வருவிக்கும் பொருண்மைத்திரிபு விதி கீழே குறிக்கப்பெற்றுள்ளது.

(4) உர் ((வெப்பம்))>உர் ((இடி))/-உம்

பொருண்மைத்திரிபு விதிகள் அடிப்படைப் பொருண்மையைக் குறிக்கும் சொற்களின் வடிவத்தை மாற்றியமைக்கவல்லவையாகும். மேலே (4)-இல் குறிக்கப்பெற்றுள்ள பொருண்மைத்திரிபு விதியில் *உர்* என்பது *உம்* என்ற விகுதியின் முன் ((இடி)) என்னும் பொருண்மையதாகத் திரிந்து *உரும்* என்ற சொன்மையதாகி நிகழ்வதைக் காணலாம். பொருண்மைத் திரிபு விதிகளைத் தொடர்ந்து, தேவைப்பட்டால் ஒலியனியல் விதிகள் (Phonological Rules) செயல்படும். மேலே (2-இல்) உள்ள பொருண்மைத் திரிபு விதிகள் மூலம் கிடைக்கும் பகு+ஐ/அல் என்ற வடிவங்கள் ஒலியனியல் விதிகளுக்கு (அதாவது, -உ>θ/-{ஐ, அல்}) உட்படுகையில் *பகை, பகல்* என்னும் வடிவங்கள் தோற்றம் கொள்கின்றன.

5.0 தமிழ் வழி தனிவழி

பொருண்மைத்திரிபு விதிகளைப் போற்றும் மொழிகள் பிற மொழிகளைச் சாராமல் தமது சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்வதுடன் பிறமொழிச் சொற்களின் ஊடுருவலையும் பெருமளவிற்குத் தவிர்க்க

முற்படுகின்றன. தமிழ், ஜெர்மானியம் முதலான மொழிகள் பொருண்மைத் திரிபு விதிகளைப் போற்றும் தனித்தன்மை கொண்ட மொழிகளுள் சிலவாகும். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் இத்தகைய விதிகளைப் பற்றி(ப் பெரிதும்) கவலைப்படாத மொழிகளாகும். அதனால்தான் இந்த மொழிகளில் வரம்பிகந்த வடசொற் கலப்பும் பிறமொழிக் கலப்பும் காணப்படுகின்றன. பொருண்மைத்திரிபு விதிகளைப் போற்றாத மொழிகள் காலப்போக்கில் தாமே சொற்களைப் படைத்துக்கொள்ளும் திறனை இழந்துவிடுகின்றன. இந்த வகையில் மிகவும் பாதிக்கப்பட்ட மொழியாக மலையாளத்தைக் கருதலாம். தெலுங்கும் கன்னடமும் இதற்கு விலக்கல்ல.

6.0 ஊழின் வழியது

தெலுங்கில் *உடுகு* (uDuku) என்று ஒரு வினைச்சொல் காணப்படுகின்றது. வேகுதல்/கொதித்தல் என்னும் பொருண்மையை உணர்த்தும் இச்சொல்லைச் *சுடு* என்னும் தமிழ் வினைச்சொல்லின் கிளைச்சொல் (Cognate) எனக் கருதமுடியுமா? *சுடு* என்பதன் மொழி முதல் உரசொலிச் சகரம் கெட்டு *உடு* என்ற வடிவம் அமைந்து, பின்னர் **உடுங்க்உ* என்ற தொல்வடிவத்தினின்றும் *உடுகு* என்ற தெலுங்கு வினை தோன்றியதாகக் கொள்ளுதல் ஒரு பார்வையாகும். இன்னொரு பார்வைக்கும் வாய்ப்புள்ளது. தெலுங்கு மொழியில் நிகழும் *உடுகு* என்பதில் காணப்படும் உட் (uD) என்பதனை வெப்பத்தைக் குறிக்கும் *உர்* என்பதன் கிளைச்சொல்லாகக் கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது. அப்படியானால் *உட், உர்* இரண்டனுள் எது தொன்மையான வடிவம் என்ற வினா எழுகிறது. இரண்டில் எதனையும் தொன்மை வடிவமாகக் கருதுவதற்கில்லை. ஏனெனில் இவ்விரண்டும் வெயில் அல்லது ஞாயிறு என்னும் பொருண்மையைக் குறிப்பதும், பழந்தமிழில் பயின்று வழங்குவதுமாகிய என்றூழ் (<என்று+ஊழ்) என்ற சொல்லமைப்பில் நிகழும் *ஊழ்* என்பதன் கிளைச்சொற்களாகக் கருதத்தக்கவையாகும். இந்த *ஊழ்* என்பது வெப்பம் என்ற பொருண்மை வரம்புக்குள் அமைந்த சொல்லாகும். இச்சொல்லின் நிகழ்ச்சி தமிழில் எங்கும் தனித்துக் காணப்படவில்லை. இதன் திரிபு வடிவங்களும் பிற திராவிட மொழிகளில் காணப்படவில்லை. ஆயினும் *உட், உர்* இரண்டையும் ஊழ் என்பதன் குறிற்பகுதியாகிய **உழ்* என்பதினின்றும் திரிந்தவையாகக் கருதலாம் என்று தோன்றுகிறது. ழகரமானது திராவிட மொழிகளில் ரகரமாகவும், டகரமாகவும் திரிவதால் **உழ்* என்பதனைத் தொல்திராவிட வடிவமாகவும் *உட், உர்* ஆகியவற்றை அதன் திரிபுகளாகவும் எண்ணிப்பார்க்கலாம். இது மேலும் ஆய்வுக்குரியது.

சங்க இலக்கியத்தில் நாடகக் கூறுகள்

சுந்தரி சிவக்கண்ணன் பி.எச்.டி.,
இணைப் பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

இலக்கியம் என்பது சமூகம் சார்ந்த படைப்புக்கலை. இலக்கியம் காலத்தின் கண்ணாடியும் கூட. கடந்தகாலச் சமுதாயத்தின் வாழ்க்கைப் போக்கினையும் நிகழ்வுகளையும் பதிவு செய்து வைத்திருக்கும் வரலாற்றுப் பெட்டகம் என்று இலக்கியத்தைக் கூறலாம். அங்கே, நிகழ்வுகளின் களமும், மாந்தர் செயல்பாடுகளும், உரையாடல்களும் தவிர்க்கமுடியாதவை. அந்த வகையில் பார்க்கும் போது, நம்முடைய சங்க இலக்கியம் மேற்கூறிய அனைத்துப் பண்புகளையும் பெற்றிருத்தல் கண்கூடு. நம்முடைய தற்கால வாழ்க்கைப் போக்கு, கடந்தகால வாழ்க்கையினின்று எந்தெந்த வகையில் மாறுபட்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளவும் பண்டை இலக்கியம் நமக்கு வழித்துணையாக உள்ளது. தற்கால இலக்கியமும் இன்றைய சமுதாயத்தின் வாழ்க்கைப் போக்கினையே எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இதிலும் நாடகப்பாங்கு இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது.

உலகம் ஒரு நாடக மேடை ; நாம் எல்லோரும் நடிக்கவந்த பாத்திரங்கள் (World is a Stage, We are all actors) என்று நாடகப் பேராசிரியர் சேக்சுபியரின் கூற்று நினைத்துப் பார்க்கவேண்டிய ஒன்று. வாழ்க்கையே நாடகம் போல் இயங்கிக் கொண்டிருக்கும் போது, படைப்பாளிகள் அந்த வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியமாக மாற்றும்போது அதில் நாடகத்தன்மை வாராதிருந்தால் தான் வியப்பு.

நாடகம் என்னும் இலக்கிய வடிவம் கவிதை, உரைநடை போன்று ஒரு மையக்கருவைக் கொண்டு இயங்குவதே. இக்கருவை விளக்கியுரைப்பதற்கே நிகழ்ச்சிகள், அதில் பங்குபெறும் மாந்தர், உரையாடல், உணர்ச்சி எனப் பலவும் பங்குபெற வேண்டிய கட்டாயம் உள்ளது. எட்டுத்தொகைப் பாடல்கள் மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. எட்டுத்தொகைப் பாட்டுக்கள், பத்துப்பாட்டு அமைப்புப்போல் எதையும் தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்று விளக்கி உரைக்கும் தன்மையில் அமைந்தவை அல்ல. ஒரு பாட்டில் ஒரு மாந்தர், தலைவி, தலைவன், தோழி, பாங்கன், பாணன் அல்லது செவிலித்தாய் என யாருடைய கூற்றாக வேண்டுமானாலும் அது அமையலாம். ஆனால் அக்கூற்றின் செய்தியைக் கொண்டே படிப்பவர் முன் நிகழ்ந்த நிகழ்ச்சியையும் பின்னர் நிகழ இருப்பதையும் அறிந்துகொள்ள வேண்டியவராகிறார்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டாயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார் புலவர்"

என்னும் தொல்காப்பியப் பொருள்

அதிகாரம் 53-வது சூத்திரம் பற்றிக் கூறுகையில், வையாபுரிப் பிள்ளை, "நாடக நூல்கள் பெருவரவினவாகி அவற்றிலுள்ள. வழக்கு நன்கு உணரப்பட்ட பின்னரே இச்சூத்திரம் இயற்றப்பட்டிருக்க வேண்டும்'' என்கிறார். (பாட்டும் கூத்தும், புத்தனேரி ரா. சுப்பிரமணியம் ப.5)

நமக்குக் கிடைத்துள்ள தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு முன்னரே தமிழில் பல நாடக நூல்கள் தோன்றி வழக்கில் இருந்திருக்கின்றன என்பதை அறியமுடிகிறது.

சங்க இலக்கியத்தின் பல பாடல்கள் புலவர்களின் வாய்மொழிப் பாடல்களே என்பார் திறனாய்வாளர், க. கைலாசபதி. இக்கருத்தை, கிரேக்கப் பாடல்களோடு சங்கப்பாடல்களை ஒப்பிட்டுப் பார்த்தே கூறுகின்றார். "வீரநிலைக்காலத்தில் எழுந்த இலக்கியங்களெல்லாம் வாய்மொழிப் பாடல்களாகவே இருந்திருக்கின்றன." (Kailasapathy, Tamil Heroic Poetry) வீரநிலைக்காலப் பாடல்கள் எழுத்துமொழி உருவாகி ஓலைகளிலோ பிறவற்றிலோ எழுதப்பட்ட காலத்திலும் வாய்மொழியாக வழங்கிவந்தன என்பர். (Bowrac M. Heroic Poetry P 216)

ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள் தங்களைப் பிற பாத்திரங்களாக நினைத்து அவர்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் பாடுகையில் அங்கு நாடகத்தன்மை சொல்லாமலே வெளிப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. அக்கூற்றுக்களுக்கு அடித்தளமாக அமைந்திருக்கும் களம் இந்நாடகத் தன்மைக்கு வளம் சேர்க்கிறது. இவ்வியல்பு அகப்பாடல்களில் மட்டுமின்றி, புறப்பாடல்களிலும் அமைந்திருப்பதை அறியமுடிகிறது. "ஆயினும் புறப்பாடல்களில் சில, பாணன், விறலி முதலான மாந்தர் கூற்றாக அமைந்துள்ளன. இத்தகு பாடல்கள் அகப்பாடல்களைப் போலவே ஒரு கூற்று நாடகவகையில் அமைந்துள்ளன." என்பார் மு.வ. (மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, பக் 39-40).

சங்க இலக்கியத்தின் அகப்பாடல்கள், தலைவன், தலைவி, தோழி முதலானவர்களின் செயல்களை அவர்களின் கூற்றுக்கள் வாயிலாகவும்

அனுபவங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்துகின்றன. எனவே பண்டைய அகப்பாடல்கள் நாடக இயல்பின (என்றும்) அகப்பொருள் வெளியீட்டிற்கு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றும் தொல்காப்பியனாரால் வகுக்கப்பட்டுள்ளன. முதற்பொருளும், கருப்பொருளும் ஆகிய அரங்கில் உரிப்பொருள் ஆகிய உணர்ச்சிச் செயற்பாடு நிகழ்கின்றது. இம்மூன்றும் அமைந்த சங்கப்பாடல்களை நாடகப்பாடல்கள் எனலாம் என்கிறார் மு.வரதராசனார். (மு. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப. 14)

இதே போன்று, சங்கப்பாடல்களில் நாடகத்தன்மை அமைந்துள்ளதை விளக்கும் வகையில் பலரும் கருத்துக்கள் கூறியுள்ளனர்.

சங்கப்பாடல்களில் நாடகக் கூறுகள் அமைந்துள்ளமையை எடுத்துக்காட்டுக்களுடன் காணலாம்.

தனிமனிதத் துயரம் வெளிப்படுத்தும் உணர்வு, அதைக் கேட்போரையும் பற்றிக்கொள்கிறது. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து உண்மையான உணர்வாக, சோகத்தில் தோய்ந்து வார்த்தைகள் தத்தளித்து வெளிப்படும் போதுதான் இது சாத்தியமாகிறது.

தான் மிகவும் மதித்த, வியந்து பாராட்டிய, நேசித்த ஒரு தலைவன் மரணத்தால் அபகரித்துச் செல்லப்படும்போது நாம் வேறு வார்த்தைகளால் உணர்த்தமுடியாது. புலம்பித்தவிக்கும் இதயத்தின் உணர்வை அவர்கள் குழம்பித் தடுமாறிப் பேசும்போது நாமும் செய்வதறியாது அவர்களோடு கண்கலங்குகிறோம்.

இந்தியப் பிரதமர் சவகர்லால் நேரு இறந்தபோது அந்தச் செய்தியின் கனத்தைத் தாங்கமுடியாது கவிஞர் கண்ணதாசன் இப்படிப் பாடினார். "சாவே உனக்குச் சாவு வராதா" இத்தகைய சொற்கள் நாடகத்தில் ஒரு தனிமாந்தர் பேசும் தனிமொழி போன்றது (Solilogue). இதோ புறநானூற்றில் ஒரு பாட்டு.

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"

(புறம். 242)

ஒல்லையூர் நாட்டுப் பெருஞ்சாத்தான் என்ற தலைவன் மாண்டபோது குடவாயிற் கீரத்தனார் வெளிப்படுத்திய அவலத்தின் சிறுதுளி இது. ஆம்! சிறுதுளிதான்! அவன் நெஞ்சத்தில் சுழித்தோடிய அவலப் பெருவெள்ளம் அத்தனைக்கும் வார்த்தை வடிவம் கொடுக்க வார்த்தைகள் உண்டா என்ன?

தான் உயிருக்கு உயிராக நேசித்த ஒரு தலைவன் மாண்டுவிட்டால், இயற்கை தன் செயல்களை நிறுத்திவிடுமா? உலகம் சுழல மறுத்துவிடுமா? ஆனால் புலவனுடைய மென்மையான புலமை நெஞ்சம் இதையெல்லாம் மறந்துவிட்டு சோகத்தில் விம்முகிறது.

[வழியில் பூத்திருக்கும் முல்லையைப் பார்த்துக் கேட்கிறான். ஏன் வீணாகப் பூத்திருக்கின்றாய்? உன்னுடைய பூவை இனி யார் பறிக்கக் காத்திருக்கிறார்கள்? இளைஞர்கள் சூடமாட்டார்கள் ; மகளிர் பறிக்கமாட்டார்கள் ; பாணன் சூடமாட்டான் ; பாடினி அணியமாட்டாள்; சிறந்த வீரம் வாய்ந்த வேலினை உடைய எம் தலைவன் மாண்ட பின்னரும் நீ பூத்தது ஏன்?]

புலவன் தான் தலைவனை இழந்து வருந்துவது போலவே, நாட்டில் இளைஞர், மகளிர், பாணன், பாடினி எல்லோரும் தலைவனைப் பிரிந்த சோகத்தில், முல்லைப் பூவைப் பறிக்க மாட்டார்கள் என்று நம்புகிறான். இதைப்போல இன்னும் பல பாடல்கள் உண்டு (எ.கா. ஔவையார்-அதியமான், கபிலர்-பாரி)

சங்கப்பாடல்கள், அப்பாடல்கள் தோன்றிய காலத்தை வீரயுகம் எனக் குறிப்பிட இடம் தருகிறது.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

(புறம் 312 பொன்முடியார்)

எனும் பொன்முடியார் பாடல் இக்கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும். இளைஞர்க்கு வேந்தர் போர்ப்பயிற்சி அளித்தலையே நன்னடை என்பர். போர்க்களத்தில் களிற்றினை வென்று மீளுதல் காளையர்க்குக் கடமை என்பது பண்டைய வாழ்வியல் முறையாக இருந்து வந்திருக்கிறது. இக்கருத்தினையே காவற்பெண்டு பாடிய புறநானூற்று எண்பத்தி ஆறாவது பாடல் விளக்கியுரைக்கிறது.

ஒரு தாயிடம் சென்று அவள் வீட்டில் நின்று "உன்மகன் எங்கே சென்றுள்ளான்?" என்று ஒருவன் கேட்கும் போது, "என் மகன் எங்கு உள்ளானோ நான் அறியேன். புலி கிடந்து பின் வெளியே சென்ற மலைக் குகைபோல, அவனைப் பெற்ற வயிறு இது. போர்க்களத்தில் சென்று அவனைக் காண்பாயாக" என்று இருவர் உரையாடலாக அமைந்துள்ள இப்புறப்பாடல் வீரத்தை வெளிப்படுத்தும் பாடலாக அமைந்துள்ளது.

"சிற்றில் நற்றூண் பற்றி, "நின் மகன்
யாண்டு உளனோ" என வினவுதி, என் மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன் ; ஓரும்
புலிசோர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே ;
தோன்றுவன் மாதே போர்க்களந் தானே! - (புறம் : 86)

இது வீர உணர்விற்குக் களமாகும் பாடல்.

அதேபோன்று, சோழன் செங்கணானோடு பொருதபோது, தோற்ற கணைக்காலிரும்பொறை, தான் சிறைப்பட்டபோது காவலரிடத்துக் குடிக்க நீர் கேட்க, அவர் காலந்தாழ்த்திக் கொடுத்தபோது அதனை உண்ணாது மறுத்துப் பாடிய பாட்டு வீர உணர்விற்குக் களம் அமைத்துக் கொடுப்பதைக் காணமுடிகிறது.

பொதுவாக நாடகக்காட்சி, படிப்போர் அல்லது பார்ப்போர் மனத்தைத் தொடும் வகையில் அமையவேண்டுமானால் களம் அல்லது சூழல் அம்மாந்தர்க்கு ஒரு சிக்கலை உருவாக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். இதனை ஆங்கிலத்தில் (Situation) என்பர். நாடகப்பாங்கில் அமைந்த சங்க இலக்கியப் பாடல்களில் இதனை நன்கு அறியமுடிகிறது. இத்தகைய பாடல்களே, பிற்காலத்தில் நாடக ஆசிரியர்கள் தங்கள் நாடகத்திற்குரிய கருவாகத் தேர்ந்தெடுத்துள்ளதைக் காணமுடிகிறது.

'குழவியிறப்பினும்' என்னும் பாடலைக் கருவாகக் கொண்டே பரிதிமாற்கலைஞர் 'மானவிஜயம்' என்னும் நாடகத்தைப் படைத்தார்.

அதேபோன்று, பேராசிரியர் மு.உலகநாதன் 'அன்னிமஞ்லி', 'வாள்விழி', போன்ற நாடகங்களைப் படைத்துள்ளார். தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், 'நற்றிணை நாடகங்கள்' என்ற தலைப்பில் ஒன்பது நற்றிணைப் பாடல்களின் நாடகத் தன்மையை விளக்கியுள்ளார்.

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
'ஆள்அன்று' என்று வாளின் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய

கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி, வயிற்றுத் தீத்தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ, இவ்வுலகத் தானே?" (- புறம் : 74)

மன்னர் குடியிலே குழந்தை இறந்து பிறந்தாலும் தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் அவற்றை வாளால் வெட்டியே புதைப்பர். பகைவர் வாளால் சாவாது போயினேன். சங்கிலியால் கட்டப்பட்ட நாய்போல் துன்புறுத்திச் சிறைப்படுத்தினர். கேண்மையற்ற கேளிராகிய பகைவர் தந்த தண்ணீரை இரந்து உண்ணோம் என்னும் மனவலிமையின்றி, நீர்விடாய் தாளாது, என்னைப் போல் தாமே இரந்து உண்பவரை இவ்வுலகில் அரசர் எனப் போற்றியுரைப்பரோ? என்ற கூற்று ஓர் இக்கட்டான சூழலில் சிக்கித் தவிக்கும் மானவுணர்வு மிக்க மன்னனின் வாழ்வின் இறுதிக்கால மனநிலையை வெளிப்படுத்தும் பாடலாக அமைந்துள்ளது.

அகப்பாடல்கள்

"அகப்பாடல்கள் பெரும்பாலும் நிகழ்ந்த ஒன்றை ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவது போல் அமைந்திருக்கின்றன. இவற்றுள் சில, நிகழ்ச்சிகளை நமக்குத் தெரிவிக்கும் முறையைக் கையாளாமல், அவற்றின் நிகழ்வை நம்மையே நேர்காணச் செய்கின்றன. இதனால் இவை நாடகங்களின் அமைப்பு முறையைத் தழுவி இயன்ற சின்னஞ்சிறு நாடகங்களாகவே ஆகிவிடுகின்றன. இத்தகைய எட்டு சிறுநாடகங்கள் குறிஞ்சிக்கலியில் இருக்கின்றன" என்பார் மார்க்கபந்து சர்மா. (மார்க்கபந்து சர்மா, குறிஞ்சிக்கலி-வழித்துணை விளக்கம்) இவருடைய கூற்று, அகப்பாடல்கள் பலவற்றிற்கும் பொருந்தும்.

குறுந்தொகையில் கபிலர் இயற்றிய குறிஞ்சித் திணைப்பாடல் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. களவில் நிகழ்ந்த தலைவி, தலைவன் சந்திப்பினால் தலைவியின் செயல்பாட்டில் நிகழ்ந்த மாற்றம் குறித்து, தோழி தலைவியிடம் கேட்டதற்குத் தலைவியின் விடையாக இப்பாடல் அமைகிறது. தலைவன் வரைவு நீட்டிப்பது தலைவிக்கு இடரினை உண்டாக்கிவிடும் என்பது தோழி முன்மொழியாக இருக்க, தலைவி அதற்குத் தரும் விடையே இப்பாடல்.

"யாரும் இல்லை ; தானே கள்வன்
தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங்கால்
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே" (குறுந்தொகை, 25)

தலைவியின் எதிர்பார்ப்பும், தலைவன் வருகை தாராது காலத்தை நீட்டிப்பதால் உண்டான ஆற்றாமையும் தலைவியின் வாய்மொழி வாயிலாக வெளிப்படுகிறது.

தன்னை அவன் களவு வழி மணம் புரிந்து கொண்ட அத்தலைவனே கள்வன். வேறு யாரும் இல்லை. அவன் கூறியது பொய்த்துவிட்டால் என்னால் என்ன செய்யமுடியும்? நாங்கள் சந்தித்த இடத்தில், சிறிய பரிய கால்களையுடைய ஒரு நாரை மட்டுமே நின்று கொண்டிருந்தது. அதுவும் கூட, எங்களைப் பாராமல், ஓடையிலே வரும் ஆரல் மீனையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தது என்கிறாள். பாடலின் கடைசி இரு வரிகள் தலைவியின் வெள்ளை மனத்தை வெளிப்படுத்துகின்றன.

இப்பாடலில் தலைவன் நேரிடையாகத் தோன்றவில்லை ; ஓடையும் குருகும் மீனும் கூட இல்லை. ஆனால் தோழியிடம் தலைவி நடந்தவற்றைக் கூறும் போது, படிப்பவர் மனத்தில், களமாகிய ஓடைக்கரையும், தலைவன் தலைவி இருப்பும், குருகும் மீனும் காட்சியாக விரிகின்றன. இதைத்தான் எழுத்தோவியம் என்பதா? நாடகப்பாங்கு இப்பாடலில் முழுமையாக அமைந்திருக்கிறது எனலாம். தலைவியின் கூற்றே, தோழி முன்னதாகத் தலைவியிடம் உரையாடியிருப்பதை வெளிப்படுத்துகிறது.

கலித்தொகைப் பாடல்கள் நாடகக் கூறுகளை நிரம்பப் பெற்று விளங்குகின்றன என்பதற்கு, கலித்தொகை 51-ஆம் பாடல் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

தலைவனைத் தலைவி தோழிக்கு அடையாளங்காட்டு முகத்தான், பண்டை நிகழ்ச்சிகள் சிலவற்றைச் சொல்லி, அவன் தலைவியின் இல்லத்திற்கு வந்தபோது நடந்த நிகழ்ச்சியை எடுத்துரைக்கிறாள்.

முன்னாளில் நாம் தெருவில் விளையாட்டிற்காகக் கட்டிய, மணல் வீட்டினைச் சிதைப்பானே... என்றவுடன் புரியாமல் விழிக்கும் தோழிக்கு அடுத்த அடையாளத்தைச் சொல்கிறாள். "பெண்களாகிய நாம் விளையாடும் வரிப்பந்தைத் தூக்கிக்கொண்டு ஓடி விடுவானே" என்று தெளிவாகச் சுட்டிக்காட்டிவிட்டு, அவன் தன் வீட்டிற்கு வந்ததை விளக்குகிறாள்.

அன்றொரு நாள் நானும் அன்னையும் மட்டும் இல்லத்தில் இருந்தபோது, தாகத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டு வந்தான்.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

இராசா. திரு. T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி

பேரறிஞர். திரு. தமிழண்ணல்

பேரறிஞர் திரு. செ. கந்தசாமி

டாக்டர் திரு. ந. சேதுராமன்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

பேரறிஞர் திரு. அ. தட்சிணாமூர்த்தி

திரு. சே. அரிராமநாதன்

திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484

மதுரைத் தமிழ்ச்சங்க

நூற்றாண்டு மலருக்கு

அறிஞர்களே!

புலவர்களே!

சான்றோர்களே!

தமிழ், தமிழ்ப் பண்பாடு,
தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்
மற்றும்
வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
குறித்த கட்டுரைகளை வழங்குவீர்!

தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-5575615

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707